உ

சிவமயம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

பலவான்குடி

# "சிவநேசன்"

## ஒன்பதாம் ஆண்டுத் தொகுதி.

யுவ ஆவணி முதல்—தாது ஆடி வரை

"சிவநேசன்" அச்சியந்திரசாலையில்

பத்திராதிபர்

ராம. கு. ராம. இராமசாமி செட்டியாரால் அச்சியற்றி
வெளியிடப் பெற்றது.

1936

சென்னைப் பதிவு எண் 3460.

உ

சிவமயம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

# "சிவநேசன்"

## ஒன்பதாவதாண்டின் உள்ளுறை


| கட்டுரையின் பெயர்கள். | எழுதிய திருவாளர்கள். | பக்கம். |
|---|---|---|
| அரசமரம் வலம் வருதல் | ... அ. முத்தைய பிள்ளை | 12 |
| அரசமரத்தை வலம் வருதலின் நியமமும் பலனும் | ச. பொன்னுஸ்வாமிக் குருக்கள் | 39 |
| அருணகிரிநாதர் குலத்தின் ஆராய்ச்சி விகற்ப நிவிர்த்தி | மாணிக்கவாசகம் | 193 |
| அன்புடன் போற்றுவோமாக | ... பத்திராதிபர் | 1 |
| அழகில் சிறந்தது | ... ஸ்ரீராமகிருஷ்ணவிஜயம் | 260 |
| ஆலயவழிபாடு | ... அ. க. பொன்னுசாமிமுதலியார் | 175 |
| இம்மை வாழ்க்கைக்கு இன்றியமையாதது | அ. முத்தைய பிள்ளை | 49 |
| இரணியூர்க்கோவில் சாஸனம் | ... | 192 |
| உடனிலை வாழ்த்துப்பா | ... M. வேதநாயகன் | 32 |
| உண்மைத் துறவறம் | ... சே. நரசிம்ம சர்மா | 250 |
| உயர்ந்தோர்கூறும்உறுதிமொழிகள் | ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் | 14, 31, 86, 176, 216 |
| உலகினர் போற்றும் திருக்குறள் | ... டாக்டர் உ. வே. சாமிநாதையர் | 278 |
| உவகைப் பத்திரம் | ... மணிவாசக சங்கத்தினர் | 225 |
| எளிமையைக் கற்பித்த எந்தல் | ... A. தம்பிரான் முதலியார் | 129 |
| ஒரு திருத்தம் | ... | 167 |
| கண்ணைத் துயின்றவமேகாலத்தைப் போக்காதே | அ. முத்தைய பிள்ளை | 69 |
| கத்தியின் வரலாறு | ... தி. மா. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் | 227 |
| கந்தபுராணத்தே ஒருபாவின் பொருள் | வே. மு. ஸ்ரீநிவாஸ முதலியார் | 55 |
| கம்பராமாயணத்தே ஒரு பாவின் திருத்தம் | ஷை | 164 |
| கந்த புராணக் காப்புச் செய்யுளின் உரை விளக்கம் | சேனுபதி நடேச செட்டியார் | 79 |
| கந்தபுராணம் ஒரு செய்யுளின் தெளிவுரை | ஷை | 114 |
| கந்தபுராணம் ஒருசெய்யுளுரை | ... ச. பொன்னுஸ்வாமிக்குருக்கள் | 121 |
| கந்தபுராணம் அமரர் சிறைபுகு படலம் 125வது செய்யுளுரை | ஷை | 135 |
| கயமுகனுற்பத்திப்படலம் 70ஆம் செய்யுளுரை | ஷை | 136 |
| கந்தபுராணத்துக்காப்புச்செய்யுளின் விபரீதவுரை | வ. மு. இரத்தினேசுவரையர் | 170 |
| கம்பராமயணத்தே ஒரு பாவின் திருத்த மறுப்பு | ப. சிங்காரவேல் பிள்ளை | 191 |

சச்சிதானந்தம் பிள்ளை யவர்களைப் பாராட்டிய கவிகள் } வி. சாமிநாதப் பிள்ளை 168
சமய முக்தி . . வ. மு. இரத்தினேசுவரையர் 169
சிவநேசனுக்கு வாழ்த்தும் மதிப்புரையும் 5, 52, 77, 172, 252
சிவனே தண்டோத்பத்தி காத்தா ... தி. மா. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் 275
சிவபாரம்யம் ... ஷை 245
சுந்தரர் நாம மறுபெயர்கள் ... மு. இரத்தின தேசிகர் 89, 111
சூடாமணிநிகண்டின்ஒருபாவின்திருத்தம், வே. மு. ஸ்ரீநிவாஸமுதலியார் 85
சேக்கிழாரின் தெய்வப் புலமை ... A. தம்பிரான் முதலியார் 41
சைவவேளாளமரபு ... சைவவேளாள மரபினன் 224
தமிழ் மொழியும் சிவநெறியும் சுவாமி, விருதை, சிவஞான யோகிகள் 61, 81, 105
தமிழ்ப் பாஷை ... S. V. கோதண்டராமய்யர் 65
தமிழ் மொழி விளக்கம் ... தி. கு. இராமசாமி முதலியார் 92
தமிழ் மணக்குந் திருவோத்தூர் ... தமிழன்பன் 95
தமிழர் தொன்மை சாமி, விருதை, சிவஞானயோகிகள் 40
தனவணிக சமூக நிலை ... பத்திராதிபர் 101, 125, 153
தருணாலய கும்பாபிடேக வித்தியாலயத் தாபன மணிவாசக சங்கத் திருவிழாப் பத்திரிகை } பத்திராதிபர் 20
தாத்வருட நாமநிச்சயம் ... சோதிடபரிபாலினி 162
திருநாவலூர் ... S. ஸந்தானகோபாலய்யர் 9
திருவெம்பாவை உரை நடை ... ப. சிங்காரவேல் பிள்ளை 137
திருவெம்பாவைப்பாடலின்கருத்து ... ஷை 181, 214, 228
திருப்புகழ் ஆசிரியர் குலத்தைப் பற்றிய ஆராய்ச்சிகள் } ஒரு தமிழன் 173
திருத்தென்குடித்திட்டைத் தேவாரத்திருப்பதிகம் பத்திராதிபர் 203
திருத்தென்குடித்திட்டைத் திருவிழாச் சிறப்பு ஷை 205, 253
தீண்டாதார் ஆலயப் பிரவேசத் தடை மா. நீலகண்டசித்தாந்தியார் 297
தெய்வமே துணை ... ஷை 53
தொண்ணூற்றூறூர் நகரத்தார் கூட்டம் 21
தொல்காப்பியச் சிறப்புப் பாயிரச் செய்யுளின் உரை விளக்கம் } சேனாபதி நடேசசெட்டியார் 80
நாட்டுக்கோட்டை நகரத்தார் சரித்திரம் } வயி. நாக. ராம. அ. இராமநாதச் செட்டியார் 177
நூல் வெளியீடு ... பத்திராதிபர் 3
நேசம் ... ஷை 257
பதினோராந் திருமுறையுள் ஒருபாவின் பொருள் ... வே. மு. ஸ்ரீநிவாஸமுதலியார் 133
பதிகத்தொகை ... சித்தாந்தம் 124
பழந்தமிழ் மக்களின் பழக்க வழக்கங்கள் } வித்துவான் M. வேதநாயகம் 37, 73, 87
பலவான்குடி மணிவாசக சங்கத் திருவிழா பத்திராதியர் 29
பசிப்பிணி ... அ. முத்தைய பிள்ளை 15
பாராண்ட நம்மன்னர் பிரிவு ... S. V. கோதண்டராமய்யர் 171

பாரதத்திலுள்ள ஒரு பாட்டின் நயம் ... S. A. முத்தையாத் தேவர் 33
பிறர்மனை நயவாமை ... ஷை 149
புலால் மறுத்தலும் சிவநெறியும் ... ஷை 185
மங்கணர் சரிதம் ... ஸ்ரீ. மா. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் 272
மணிவாசக சங்க அறிக்கைப் பத்திரம்... மணிவாசக சங்கத்தார் 217
மதிப்புரை மஞ்சரி பத்திராதிபர் 3, 31, 76, 78, 122, 254,
யதுகுலநாசம் ... ஸ்ரீ. மா. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் 48
வஞ்சக வாழ்க்கை ... வ. மு. இரத்தினேசுவரையர் 4
வில்லிபுத்தூராரும் சிவபெருமானும் ... S. A. முத்தையாத்தேவர் 57, 117
விரதச்சுவாதிவி திவழி முறையே ... சிவசூரியநாராயணபிள்ளை 161
வீரத்தந்தையின் தீரப்புதல்வன் .. A. தம்பிரான் முதலியார் 7
வேதாகம உண்மை சுவாமி, விருதை, சிவஞானயோகிகள் 197, 209, 235
வைகறைத் துயிலெழு ... K. P. சுப்பிரமணிய சிவாசாரியர் 270

---

தாண்டவராய கவிராயரியற்றிய "திருமயிலை யமக வந்தாதி மூலமும் பழய உரையும்" உயர்திருவாளர் மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்திய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களால் அவர்கள் முகவுரை முதலியவற்றுடனும், "சுலோக பஞ்சக விஷயம்" பொன்னேரி, ஸ்ரீ. மா. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் அவர்களால் அவர்கள் பொருள்விளக்கம், ஆட்சேப சமாதானங்களுடனும் வெளிவரலாயின.

---

## சிவநேசனுக்கு வாழ்த்தும் மதிப்புரையும் வரைந்தனுப்பிய திருவாளர்கள்.

1 பண்டித அ. கோபாலையர் ஆலங்குடி.
2. வ. மு. இரத்தினேசுவரையர் தமிழ்ப்பண்டிதர், யாழ்ப்பாணம்.
3. அ. முத்தையா பிள்ளை, கண்டாச்சிபுரம்.
4. S. ஸந்தான கோபால ஐயர், ஆசிரியர், திருநாவலூர்.
5. ச. பொன்னுஸ்வாமிக் குருக்கள், சுதுமலை.
6. ஊ. சா. வேங்கடராமையர், தமிழ்ப்பண்டிதர், கும்பகோணம்.
7. S. A. முத்தையாத் தேவர், அசுகூர்.
8. சஷ்டி. சுவாமி, சண்முகநாதர் கோவில் தருமபரிபாலனம், பரிமணங்குடி.
9. வயி. நாக. ராம. அ. இராமநாதச் செட்டியார், அமராவதி புதூர்.
10. கு. அண்ணாமலைப் பிள்ளை, சின்னமனூர்.
11. ஆனந்தகான சபையார், கரிசூழ்ந்தமங்கலம்.
12. வி. சாமிநாத பிள்ளை, தமிழ்ப்பண்டிதர், போளூர்.
13. ராம. உ. ராமசாமி செட்டியார், காரைக்குடி.

---

௳

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

# சிவநேசன்.

## செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

பலவான்குடி.

| | | |
|---|---|---|
| ஆண்டு ௯ | யுவ—ஆவணி 1935—ஆகஸ்டு | திங்கள் ௧ |

உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்கும்அரு ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

## அன்புடன் போற்றுவோமாக.

இன்ப மாய தருதிடை யோங்கவுந்
துன்ப மாய துதூரத்து ணீங்கவு
முன்ப ராபரன் மொய்குழ லோட்டைணந்
தன்பி னீன்றவோ ரானையைப் போற்றுவாம்.

எனப் பெரியார் துதித்துள்ளவாறே தன்னை வழிபடும் அடியவர்களுக்கு இன்னல்களைந்து நன்னலம் அருளும் முன்னவனாகிய ஐங்கரத்தண்ணலை முன்னதாக விதிநான்முறையே அன்புடன் போற்றுவோமாக.

அன்பருக் கன்பனாய் இன்பவீடருளும் சிவபரம் பொருளையே தேவதேவராகமகாதேவராகஉலகமுதல்வராகஉலகாதீதராகக்கொண்டுள்ள சைவ சமயமே சமய கோடிகளுக்கெல்லாம் தலையாய மெய்ச்சமயம்என்பதையும் தோன்றாத்துணையாய்த்தொண்டர்தம்உள்ளத்தே கோயில் கொண்டருளும் சிவமே என்றும் உள்ள தனி முதல் என்பதையும் சிவநேசம் பூண்டொழுகுதலே சீரிய நெறியாம் என்பதையும் செந்தமிழ்மொழி சிவபெருமானருளியதே என்பதையும், அதுவே 'என்றுமுள தென்றமிழ்' என்பதையும் செந்தமிழே தித்திக்கும் மொழியாம் என்பதையும் தெய்வக்கொள்கையுடன்

மொழி வளர்த்தலே சிறப்பாம் என்பதையும் சமய வளர்ச்சியும், மொழிவளர்ச்சியுமே நாட்டின் நலத்திற்கும் ஆன்மவுணர்ச்சிக்கும் ஆன்ம ஈடேற்றத்திற்கும் உதவி புரிந்து திருவருள் நெறியைச் செவ்விதின் உணர்த்தி இன்பந்தரும் என்பதையும் நன்கு விளக்கி, சைவத் தனி முதலையும் தெய்வச் செந்தமிழையும் போற்றி அன்பர்கட்கு உய்வகை புணர்த்தக் கைவந்ததவும் நம் 'சிவநேசனுக்கு' இஃது ஒன்பதாவதாண்டின் முதற் றிங்களாகும். சீர்சால் 'சிவநேசன்' தனது எட்டாவதாண்டிலும் இயன்றளவு சைவத்திற்கும் தமிழுக்கும் சிறந்த தொண்டாற்றியுள்ளான். ஆகவே, சிவம் பெருக்கி வாழும் சீரிய சிவநேசனை மென்மேலும் அன்புடன் போற்றுவோமாக.

சீர்மைமிக்க சிவநேசன் வளர்ச்சிகருதி பேரன்புமிக்க பெரியார் பலர் சீரியகட்டுரைகளும் சிறப்பான செய்திகளும் வாழ்த்துப்பாக்களும் மதிப்புரைகளும் பழந்தமிழ்நூல்களும் வரைந்து வழங்கிப் பெருமை பெறச்செய்தனர்; செய்கின்றனர். அவநேசம் பாற்றி சிவநேசம்போற்றும் சிவநேசனை அன்பர் பலர்வரவேற்று ஆதரித்து அன்புபாராட்டுகின்றனர்; நலமார் சிவநேசனுக்கு ஆண்டுவரி அதற்கென மூலதனப் நன்கொடை ஆதியவைகள் உதவுகின்றனர். இவ்வாறாக ஆதரித்துவரும் சிவநேசச் செல்வர்களும், செந்தமிழ்ச் செல்வர்களும் மென்மேலும் ஆதரித்துவர அவர்களை வேண்டிக் கொள்வதுடன் அவர்களின் உதவியையுவந்து அன்புடன் போற்றுவோமாக.

சைவம் வளர்த்த தகைசால் பெரியார்களையும், சைவசமயாசாரியர்களையும் சந்தானசாரியர்களையும் சைவமெய்த் தொண்டர்களையும் தெய்வத்திருநீறு கண்டிகை திருவைந்தெழுத்து ஆகிய சைவசமயசாதனங்களையும் அன்புடன் போற்றுவோமாக.

வளந்தருந் தெய்வீக வடிவையுளந்தனிற்கண்டு ஆதரிப்போர்க்காருயிராய் அன்பரகத் தாமரையின் மீதிருக்குந் தெய்வ விளக்கொளியாகிய குகனை சிவகுருநாதராகிய சீர்க்குமரேசரை எங்கள் செந்தமிழ்ப் பரமாசாரியராகிய செந்திறைதனை வீறுடைத்தனி வேல் முருகையனை நடுவுட்கொண்டு ஆன்ம கோடிகட்கெல்லாம் அன்னையத்தனும் தன்மையுணர்த்துவான் உண்மையறிவானந்தவுருவினராய் யாவர்க்குமேலாம் அளவிலாச் சீருடையராய் உம்பர்கள் தம்பிரானுய்த்திகழும் எம்பிரான் திருவருளே எல்லா நன்மைக்கும் துணையாதலின் அம்மையப்பரின் அருளாணைவழியே அவர்க்குரிய திருப்பணிகள் புரிந்து சீரியதொண்டாற்றிமேலும் சிவம்பெருக்கி இமைப்பொழுதும் என்னெஞ்சினீங்காத அவ்விறைவர் திருத்தாள்களை மனதாரச்சிந்தித்து வாயாரவாழ்த்தி மெய்யுறவணங்கி நல்வாழ்வுற அனுதினமும் அன்புடன் போற்றுவோமாக.

# மதிப்புரை மஞ்சரி.

சைவப்பிரகாசிகை:— அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்களவர்கள் எழுதிவெளியிட்ட மூன்றும்புத்தகம் வலம்புரி விநாயகர் வரலாறு ஆதியாக சரீராரோக்கியம் வரை தெய்வமூர்த்தங்களையும் திருவிளையாடல்களையும் வழிபட்டுப்பேறுபெற்றவர்களையும் திருத்தலங்களையும் திருக்கோயில்களையும் திருநாட்களையும் சிவசாதனங்களையும் பெரியார்களையும் முனிவரர்களையும் அறநெறிகளையும் குறிப்பாக பண்டிதர்களும் பாமரர்களும் இலகுவில் உணரத்தக்கமுறையில் இருக்கிறது. மாணவர்களின் கற்புக்குரியது. 33உள்ளுறைகளுடன் கூடிய இதன் விலை சதம் 20. ச. கு. வைத்தீசுவரசர்மா, அச்சுவேலி P. O. யாழ்ப்பாணத்திற்கு எழுதிப்பெறலாம்.

தேவிகாலோத்தர ஆகமம் தமிழ் மூலமும் உரையும்:—சிவாகமங்களின் சாரமாகிய தேவிகாலோத்தரமென்னும் ஆகமம். இது பக்குவான்மாக்களுக்கு உபதேசிக்கத் தக்க சித்தாந்தப் பொருளைச் சிவபெருமான் உமாதேவியாருக்கு அருளியது. ஞானம் ஞானசாரம் என்னும் இரு பிரிவுகளையுடைய இந்நூல் வடமொழியில் எண்பத்தைந்து சுலோகங்களுடனும் விருத்தியுடனும் உள்ளதை தமிழில் மொழிபெயர்த்துச் செய்யுளாகப் பாடப்பெற்றது. பாடியவர் பெயர் முதலியன தெரியவில்லை. இத்தமிழ் மூலத்திற்கு தேவகோட்டை சிவாகம சங்கத்தின் சித்தாந்தபோதகர் திருவாளர் பொ. முத்தையபிள்ளையவர்கள் சித்தாந்தார்த்த விருத்தி என்னும் பெயருடன் ஓர்உரையும் ஒவ்வொரு செய்யுளுக்கும் அவதாரிகை, பதவுரை, பொழிப்புரை, கருத்துரை, விசேடவுரைகளும் பொருளகராதியும் எழுதி நம்சிவநேசனில் வெளியிட்டுள்ளார்கள். சிவஞானத்தின் சாரத்தைத்தெளிவுற விளக்கும் இந்நூல் மிகவும் மேன்மையுடையது. விரைவில் வெளிவரும். விலை அணா 10. வேண்டுவோர் அவர்கள் விலாசத்திற்கு எழுதிப் பெறலாம்.

## நூல் வெளியீடு.

திருமயிலை யமக வந்தாதி மூலமும் உரையும்:— இவ்வாண்டில் தொடங்கப்பெற்றுளது. இந்நூல் சென்னை மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்திய கலாநிதி டாக்டர் உயர்திரு, உ. வே. சாமிநாதையரவர்களால் இன்றியமையாத குறிப்புகளுடன் வெளிவருவது. நூலின் சிறப்பும் பதிப்பாசிரியரின் பெருமையும் பாராட்டுந்தகையன. இந்நூலையும் இன்னும் பன்னூல்களையும் ஐயரவர்களும் திருநெல்வேலி தமிழ்ப்பண்டிதர் திருவாளர், ஆ. ஈசுரமூர்த்தி பிள்ளையவர்களும், தேவகோட்டை சிவாகம சங்கத்தின் சித்தாந்தபோதகாசிரியர் திருவாளர், பொ. முத்தைய பிள்ளையவர்களும், சிவபாதத்துவ நிரூபண சிகாமணி பொன்னேரி திருவாளர், தி. மா. ஸ்ரீநிவாசய்யங்காரவர்களும் நம் சிவநேசனில் வெளியிடும்படி செய்தமை நம் சிவநேசனுக்குப் பெருமைதருவனவாகும்.

உ

# வஞ்சக வாழ்க்கை.

யாழ்ப்பாணம், தமிழ்ப்பண்டிதர், திரு. வ. மு. இரத்திநேசுவரையரவர்கள்.

இவ்வுலகில் வாழும் கோடாகோடி உயிர்வருக்கங்களில் இன்ப துன்பக் கூறுபாடு உணர்தலின்மேம்பாடுமக்களுயிர்க்கே உண்டு. மக்கள் பல்லாயிரமாண்டுக்ளுக்குமுன் இருந்த நிலைக்கும் இக்காலமிருக்கும் வாழ்க்கைக்கும்பேதமதிகமே; தனித்தவாழ்வு இனிதெனக்கூறுவது உயிர்கட்டுவிட்டுஇறையை அடைதற்கே சாதனமாம். உலகியனெறிக்குக் குழுமிவாழ்தலே ஏற்றமுறையாகும். அன்பினால் பிணைக்கப்பெற்று இன்பமாகவாழ்தலே மிக்கிருந்த காலமுமுண்டு. பற்பல பாகுபாடும் ஒழுக்காறும் உலகியல் கடைபோக இன்றியமையாதனவாகும். ஒவ்வோர்கூட்டத்திற்கும் தலைமையான ஒருவர் வேண்டப்படுவர். உணர்ச்சிகுன்றி இறுமாந்தவர்களுக்கு தலையுங்காலும் ஒன்றுதான். நாகரிகம் என்பது உடல் உயிர் இரண்டிற்கும் நலந்தர வேண்டும். "அஹிம்சை" என்று சொல்லளவில் பயனில்லை; ஒழுக்கத்தின் வழியதே பயனுளதாகும். வஞ்சித்து வாழ்வதுவாழ்க்கை என்ற பேரளவில் காலம் இனிது செல்லலாம். "கெட்டிக்காரன் புளுகு எட்டுநாள்" மட்டுந்தான். பின்யாவும வெட்டவெளியாய்விடும். இதுபோலத்தான் பத்திரிகை நடத்தல், புஸ்தகம் எழுதல், கலைபயிற்றல் முதலிய பலவும் இருக்கலாம் நிகழக்காணலாம். எல்லாம் குதூகலமாகவே முடிகின்றன. மங்கலத்திலும் குதூகலம் அமங்கலத்திலும் குதூகலம். பிறர் பொருளை அபகரித்து ஆடம்பரமாகவும் குதூகலம். மனநிறை குன்றிய இடத்தும் ஒரு குதூகலந்தான்! இவைஅனைத்தும் முறையான கல்விகேள்வியுடையார் மாட்டுஎவ்விதமிருக்கும் என்றுஎழுதவேண்டாம். இளமை, அவிவேகம், சரீரபுஷ்டி முதலியன இருந்தால் நீதிதெரியுமா? பெரியோர் சிறியோர் பேதந்தெரியுமா? கடவுளுணர்ச்சிதலைக் காட்டுமா? யாவுந்தலைகீழ்ப்பாடந்தான்! செல்வம் வந்துற்றகாலைத் தெய்வமுஞ் சிறிதுபேணுரைப் பற்றிச்சொல்லவுமா வேண்டும்? பயனிலாச் செல்வரை நடைப்பிணம் என்றதால் குற்றமுண்டாகாது. ஒரு பெரியார் அஞ்சாது பிணமெனவுரைத்த அரும்பாடலைக் கவனிக்க.

> அரிசனம் பூசிமாலை அணிந்து பட்டாடை சாத்திப்
> பரிசனம்பின்பு செல்லப் பாரகர் பரிக்கக் கொட்ட
> வரிசின்னமூதத் தொங்கல் வந்திட * *
> பெரியவர் பேச்சுமின்றிக் கிடத்தலால் பிணத்தோடொப்பர்.

வெளிவேடத்தால் வஞ்சித்துப் பணம்பறித்து உல்லாசவாழ்க்கை வாழ்வதினும் இறந்துபடுவது நன்றாகும். அறிவுதலைக்காட்டாத மக்கள் வாழுமிடங்களில் பழங்கதையும், உடைநடைபாவனைகளின் இழிவு கதையும் சொற்பெருக்கென்று செய்து சிரிக்கலாம். நூலறிவன்றோ துணையாக வேண்டும். வெள்ளாடு நனைவதைக்கண்டு வேங்கை இரங்கியதுபோல ஏமாற்றஞ்செய்து வெள்ளைவேஷ்டியுடன் வெள்ளைக் கோஷ்டியாக வரும் ஆசாமிகளின் ஆபாசவுரைகேட்டு ஏமாந்துபோகாது தமிழ்மக்கள்தக்காரைப் போற்றி இன்புடன்வாழ முன்னிற்பார்களாக. மறந்தும் பிறன்கேடு சூழாமாந்தரைமதித்து நடக்க முன்னுவார்களாக.

"அரங்கின்றி வட்டாடியற்றே நிரம்பிய நூலின்றிக் கோட்டிகொளல்"

# சிவநேசனுக்கு வாழ்த்து.

(ஆலங்குடி திருவாளர், பண்டித, அ. கோபாலையரவர்கள்)

செல்வச் சிவநேசன் எட்டாவதாண்டு நிறைவைத் தெரிவிக்கும் பகுதி, நேற்றுப்பெற்று மகிழ்ந்தேன். தாங்கள் இக்குழந்தையை, உள்ளும் புறமும் அழகாய்ப்போற்றி வளர்த்துவருகிறீர்களென்பது, இவ்வுலகம் அறிந்த தொன்றும். அதனால், தமிழுலகம்—அதிலும் ஆஸ்திகலோகம் இக் குழந்தையின் வளர்ச்சியைத் தன் குழந்தையின் வளர்ச்சியாகக் கருதி வாழ்த்தி வருவதுந் திண்ணம்: அம்முறையில், யானும் வாழ்த்துகின்றேன்:—

சிவநேசம் பூண்டு சிவஞ்சே ருரையாற்
சிவநேசர் தீட்டுந் திருவார்—சிவநேசன்
எட்டாண்டின் மேலா வினிவரும் பல்லாண்டும்
இட்டாண்டு வாழ்க வினிது.

இதன் உரை நடை: சிவநேசர், சிவநேசம் பூண்டு சிவஞ்சேர் உரையால் தீட்டும் திரு ஆர் சிவநேசன், இனிவரும் பல்லாண்டும் எட்டாண்டின் மேலா இட்டு ஆண்டு இனிது வாழ்க என்பதாம்.

குறிப்பு:- சிவம் - மங்களகரம். திரு - செல்வம்; கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம். எட்டாண்டின் மேலா - சென்ற எட்டாண்டுகளிலும் பெற்ற மேன்மையினும் அதிக மேன்மை தனக்குண்டாகும்படி. இட்டு ஆண்டு - உலகத்திற்கு அறிவையும், ஆத்திக புத்தியையுங்கொடுத்து, அவ்வுலகத்தைத்தன் வசப்படுத்தி, சிவநேசன் 'பல்லாண்டும் இனிது வாழ்க' எனப் பல்லாண்டு கூறிய படியாம்.

---

(யாழ்ப்பாணம் தமிழ்ப்பண்டிதர்
திருவாளர், வ. மு. இரத்தினேசுவரையரவர்கள்)

1. வேதமெனும் பாதபத்தின் மெய்க்கனியின் சாரத்தைப்
போதமுறக் காட்டுமுயர் பொற்பதனால்—நீதமிகு
சைவத் திருவிளக்கு சற்பானு வாம்நேசன்
சைவர்க் கொளியென்றே சாற்று.

2. தண்டமிழ் தேரிராம சாமிப் பெருந்தகையின்
கொண்டனோர் நன்றி, குறைவின்றி—எண்டிசையுஞ்
செல்லத் திகழ்தலினால்; செம்மைச் சிவனடியார்
மல்கின ரென்றே மதி.

3. வாழ்க! "சிவநேசன்" வாழ்க! சிவசமயம்
வாழ்க! செழுந்தமிழும் மாநிலத்தே—வாழ்கவே!
இந்தணி மெய்மா னெழிற்பெரு நன்னுமம்
சந்ததமு மின்பந் தளிர்த்து;

4 கற்றோர்க் கருமையுங் கல்லார்க் கினிமையுங் காட்டிவளர்
நற்றாய் நிகர் "சிவ நேசன்" இனிய நலமளித்தே

முற்ரு விளமதி சூடிய வண்ணல் முழுதருளால்
வற்ருச் சுரபி நிகரவிப் பாரில் வளர்குகவே.

(கண்டாச்சிபுரம், திரு, அ. முத்தையப் பிள்ளையவர்கள்.)

வாழ்கசிவ நேசன் வளர்கசந் தாதார்கள்
வாழ்கவா னந்தமெனு மாகடலுள் - வாழ்கநலம்
ஓங்குகபல் லாண்டிருந்த வொன்பதா மாண்டினிலுந்
தாங்குகசீர் பற்பலவுந் தான்.

பண்டைநாட் காழிக் கவுணியர் கோவும்
பகாரு மப்பர்சுந் தரரும்
தண்டமிழ் மணிவா சகமுரைத் தவரும்
சார்ந்துரை வய்வளர்த் தனரால்
மண்டிணிஞாலத் திற்றைநாள் வளர்ப்பான்
வழங்கினன் ராமசா மிப்பேர்
கொண்டநல் வணிக குலத்தினன் 'சிவநே
சன்' எனக்குலவுசஞ் சிகையே.

தாங்கருங் கரிய கடல்விட முண்ட
சங்கர ஞேவயி லேந்தி
தீங்குசெய் கொடிய தட்டரைச் செகுத்த
சேவலங் கொடியுடைத் தேவோ
ஓங்குயர் மலயத் தருந்தவ முனியோ
வுதித்தன ரொண்டமிழ் வளர்ப்பான்
ஈங்கென வுரைக்கு மெழில்சிவ நேசன்
இரவியுள் ளளவும்வா ழியவே.

(திருநாவலூர் போர்டு ஹைஸ்கூல் தலைமையாசிரியர்
ஸ்ரீ ஸந்தானகோபால ஐயர் அவர்கள்.)

சிவநேசனுக்கும் நந்திக்கும் சிலேடை.

எந்தை பதஞ்சேர வருமெவ் வெவர்க்கும்
எதிரிருந் து இந்நெறி யென்றிசைத் துப் பின்னும்
சந்ததமும் மும்மலத்தைத் தகித்த பேர்க்கே
சரணளிக்குஞ் சிவமெனச் சான்றளித்த லாலே.

நந்தி பெருமானை யொப்பு நவிலலாகும்
நற்பலவான் குடிவளர்ந் து நம்மெல் லோர்க்கும்
வந்து களியூட்டு சிவநேசன் றன்னை
வாழியென அகங்குளிர வாழ்த்து வோமே.

அதாவது, கைலையங்கிரியில் காவலாகவீற்றிருக்கும்ஸ்ரீ நந்தியெம்பெருமான் பரமனை வணங்கவரும் பண்ணவராதியோர்க்கு அவரவர் தரத்துக் கேற்றவாறு நெறிவகுத்து விடுத்து, பாசமாகிய திரை நீக்கினவர்க்கே பதி விளங்குமெனத்தான் பசுவாக நின்று சான்றுபகர்வது போல் நம் 'சிவநேசன்' சைவநெறியுடையார்க்குத் தக்கநெறிகாட்டி பதிபசுபாசவிளக்கம் பகர்தலால் நந்தியெம்பெருமானுக்கு ஒருவாறு ஒப்பிடலாம்.

# வீரத் தந்தையின் தீரப் புதல்வன்.

(சென்னை தொண்டைமண்டலம் துளுவவேளாளர் உயர்கலாசாலை
ஆசிரியர், திரு, A. தம்பிரான் முதலியாரவர்கள்)

பிக்கென் (Fi-ken) என்பவன் 'கியாங்கு' (Kiang) தேசத்து 'ஹோயாங்கு (Hoang)' எனும் வர்த்தகனின் ஆறு மக்களில் மூத்தவன் ஆவான். அக்காலத்து, அரசாங்கத்தில் முழு அதிகாரம் பெற்றிருந்த மாஜிஸ்டிரேட் ஒருவனிருந்தான். அவன் குடிகளை வருத்தி நிரபராதிகளின் நிறைந்தசெல்வத்தையாவும்பேராசைப் பிணியால்கவர்வதும்தானடைவதும் ஆதியநீத்நியாதிகொடுமைகள்பலபுரிந்துவந்தான். அம்மாஜிஸ்திரேட் கவர்னரின் குறையா அன்பைப்பெற்றிருந்தானாதலின் அவனது தீச்செயல்களைக் குறித்து கவர்னரிடம் குறை கூற ஒருவரும் முன் வந்தார்களில்லை.

கடைசியில், அஞ்சா நெஞ்சு படைத்து அட்டூழியம் பல இடைவிடாது இயற்றிவரும் அவனைப் பற்றிக் குறைகூறி இன்னல் களைய ஹோயாங்கு வீரன் ஒருவனே முன் வந்தான். தன் நண்பன்மீது குறை கூறக் கேட்ட கவர்னர், என்றுமிலாச் சினத்தனாய் மறுமுறையும் தனக்கு வேண்டிய அவர் மீது ஹோயாங்கு குறை கூறுவானேல் ஹோயாங்கைச் சிறைப்படுத்துவதாகக் கூறிப் பயமுறுத்தினார்.

உதவியில்லாது, தீராக்கோபம் பொங்கியெழ, ஆராமனத்தனாய் ஹோயாங்கு யாதுஞ் செய்யத் தோன்றாது வாளா வீடு திரும்பினன். வழியில், கருங்கல் மனத்தனாய அம்மாஜிஸ்திரேட்டு, ஓர் கிழவியை இழுத்துக் கொண்டு வரக் கண்டான். அக் கிழவியோ ஆதரவில்லாது அழுதழுது தத்தளித்துக் கொண்டிருந்தாள். இந்நிலைமையைக் கண்ணுற்றதும் தன்னடக்கம் விடுத்து, தன்னையுமறியாது வீரன்கோபங்கொண்டான். உடனே அவ்வதிக்கிரமப் பாவிமீது ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து அவனைக் கீழே தள்ளிக் கொன்று வீழ்த்தினான்.

இக் குற்றத்திற்காக ஹோயாங்கு, கைது செய்யப்பட்டதுமன்றி மரண தண்டனையும் விதிக்கப்பெற்றான்.

இதைக் கேள்வியுற்ற ஹோயாங்கு வீரனின் தீரமைந்தனும் பிக்கென், தன் தந்தையைக் காக்க, கவர்னர்பால் விரைந்தோடினான். ஆனால் கவர்னர் அச்சிறுவனுக்கு முதலில் பேட்டியளிக்க மறுத்தனர். ஆகவே மைந்தனும் அந் நாட் கழித்து மறுநாள் சென்றான். கடைசியில் அவனது விடா முயற்சி நன்கு பாராட்டப்பட்டதன்றி அவனை அனைவரும் அன்புடன் வரவேற்றனர். பின்னர், பிக்கென், கவர்னரை யடுத்துத் தங்கள் குடும்பத்தைக் காப்பாற்ற தன் தந்தையை விடுத்துத் தந்தைக்குப் பதிலாகத் தனக்கு அம் மரண தண்டனையை விதிக்குமாறு பன்முறையும் இரந்து வேண்டினான்.

உருவத்தில் சிறியவனாயிருக்கக் கண்ட கவர்னர், இவன் பிறர் கற்பனையால் இங்ஙனம் கூறுகின்றானோ என ஐயங்கொண்டு உண்மையை யறிய முதன் மந்திரியை ஏவினான். அங்ஙனமே முதன் மந்திரியும் அவனை விசாரித்தான்.

“நல்லெண்ணங்களைத் தூங் கிடைக்கப்பெறும் ஒப்பற்ற ஒரு தனி முதலைத் தவிர வேறொருவரிட மிருந்தும் இவ்வெண்ணம் எனக்கு உதிக்கப் பெறவில்லை” என்றினிமையுடன் இயம்பினான் பிக்கென்.

மேலும் பரிசோதிப்பான் வேண்டி, தன் குடும்பத்தைக் காப்பாற்ற அச்சிறுவன் தாய் மேனாட்டுவழக்கப்படி மறுவிவாகம் செய்துகொள்ளக் கூடும் என்பதையும் மந்திரி குறிப்பிட்டுக் காட்டினான். அதற்கும் அச்சிறுவன் “எங்கள் தந்தையைப் போன்றவர் எம் தாய்க்கு வேறொருவரும் உலகில் இரார். அன்றியும் அவரைப் போன்று என் சகோதர சகோதரிகளிடத்தும் அன்புபாராட்டுபவர் வேறொருவரும் இருக்கமாட்டார்” என்று தீரமாகப் பதிலிறுத்தான். மந்திரி மிக்கமனமகிழ்ந்து அச்சிறுவனைக் சிறிது நேரம் தாமதிக்கவேண்டி அறையை விட்டகன்றான். அவன் திரும்புகையில், தனது வேண்டுகோள் அனுமதிக்கப்பெறும் என்ற நிச்சயத்துடனிருந்த அச்சிறுவன் அச்சரியவெண்ணத்துடன் அவனுக்குவந்தனமளிக்க எத்தனிக்கையில் மந்திரி “நான் கூறவந்தது உன் மறுப்பைப் பற்றியல்ல; உனது தந்தையின் மன்னிப்பைப் பற்றித்தான். சிறியோரெல்லாம் சிறியருமல்லர் என்பதற்கிணங்க இவ்வளவு அறிவும் ஆற்றலும் கூடியமக்களை வளர்த்த தந்தை முக்காலும் குற்றமற்றவனாகத் தானிருக்கவேண்டும்,” என்று தீர்மானமாகப் பதிலளித்தான்.

கவர்னர், இளஞ்சிறுவன் இறைவன்மாட்டுக் கொண்டுள்ள தூயபத்தியையும், ஆழ்ந்த அறிவையும், ஆற்றலையும் புகழ்ந்துகூறி அவனைப்பற்றி உலகம் எஞ்ஞான்றுமறிய ஞாபகச்சின்னமாக ஒருகல் நாட்டவிரும்பினான். ஆனால், தன்னலங் கருதாது தன் தந்தைக்காக உயிர்விடத் துணிந்த தன்னைப் பற்றி மக்கள் நினைக்கும்போதெல்லாம் அவர்கட்குத் தன் தந்தை கவர்னரை மறுத்தகாரணமும் கவர்னரின் நண்பன் கவர்னரறியாது செய்த தீச்செயலும் வெளியாகி ஞாபகத்திற்குவரும் என்ற காரணம் பற்றியே தான் தனக்கு அவ்வித மதிப்பு வேண்டாமென்று மறுத்துவிட்டான்.

எனவே, அன்பர்களே! மேனாட்டுச் சிறுவனின் மேன்மையான அறிவையும், விரிந்தநோக்கத்தையும் இறை பத்தியையும்தந்தைபொருட்டுத் தன்னுயிரையே விடத்துணிந்த தன்மையையும் உற்றுநோக்குங்கள்.

“மகன்றந்தைக் காற்றுமுதவி இவன்றந்தை
என்னோற்றான் கொல் எனும்சொல”

என்ற திருவள்ளுவதேவரின் திருவாக்கு இச்சிறுவனிடம் மெய்ப்பிக்கப் பெற்றதன்றோ.

(இக்கட்டுரை, பவ ஆண்டு பங்குனித் திங்கள் ஐந்தாம் நாள் பிறந்த ஓர் குழந்தையின் ஞாபகத்திற்கென, ஆங்கிலத்தினின்று மொழிபெயர்த்து அழகுபெற அமைத்ததாம்.)

உ

# திருநாவலூர்.

(திருநாவலூர் போர்டு ஆண்பாடசாலை தலைமை யாசிரியர்
திரு. S. ஸந்தான கோபால ஐயரவர்கள்)

திருநாவலூர் என்பது சோழநாட்டிற்கும், தொண்டை நாட்டிற்கும் நடுவேயுள்ள நடுநாடெனப்படும் திருமுனைப்பாடி நாட்டின் கண் இருக்கும் ஓர் சிறந்த சிவஸ்தலமாம். இத்திருமுனைப்பாடி நாட்டை ஆசிரியர் சேக்கிழார்,

''மங்கையர் வதனசீத மதியிருமருங்கு மோடிச்
செங்கயல் குழை கணுடுந் திருமுனைப்பாடிநாடு'' என்றார்.

அதாவது தண்மை மிகுந்த மதிபோன்ற பெண்டிர் திருமுகத்தில் தோன்றும் கயல்மீன் போலும், செவ்வரி படர்ந்த கண்கள் காதளவு ஓடியனவாய்க் காதிலணிந்துள்ள குழைகளைப் போய்ப் பற்றுந் தன்மையனவாயிருத்தலின், குளிர் நீர் மிகுந்த பொய்கையிற் செவ்விய கயல் மீன்கள் தளிர்களைப் பற்றுவன போன்ற தோற்றம் மங்கையர் திருமுகங்கட்கு இருந்தன என்றார். இதனால் உடலழகும், உள்ளச் சால்பும் உடைய உத்தமப் பெண்மணிகள் நிறைந்த நாடு திருமுனைப்பாடி நாடென்பது கூறப்பட்டது. இன்ன தன்மையாக மேன்மையுற்ற நாட்டின்கண் மேற்சொன்ன திருநாவலூர் அமைந்திருக்கிறது.

ஓர் காலத்தில் பார்வதி தேவியார் ''சர்வலோக நாயகராகிய ஸ்வாமீ! பூலோகத்தில் உயிர்கள் தேவரீரைச்சேவிக்கும் பொருட்டுத் தேவரீர் அருட் பிரசித்த நாமரூபந்தாங்கி எழுந்தருளி யிருக்கும் முக்கிய ஸ்தலம் யாது? உரைத்தருளல் வேண்டும்'' என்று வினவ, ஸ்வாமி ''பெண்ணே! பூலோகத்திலே நமக்கு உவந்த ஸ்தலங்கள் காசி முதலாக எண்ணிறந்தனவாம். அவற்றுள் நாம் சோதிப்பிழம்பாய் நின்ற திருவண்ணாமலைக்கும், நாம் நிருத்தஜோதியாய் ஆனந்த நடனஞ் செய்யும் சிதம்பரமாகிய தில்லைவனத்துக்கும் நடுவே நிலை பெற்றுள்ளது திருநாவலூர் என்னும் திவ்விய ஸ்தலமாம். அங்கே பிர்மா, விஷ்ணு, இந்திரன் முதலிய தேவர்களெல்லாம் வந்து வேண்டிய வரங்களைப் பெற்று மீள்வார்கள். அத்தலத்தில் சத்துவகுண பூதர்களாய் யார் யார் வந்து நம்மை வழிபடுவார்களோ அவர்களுக்கெல்லாம் வேண்டிய வரங்களைத்தந்து ''பக்தசநேசுவரன்'' என்னும் நாமந்தரித்துச் சிவலிங்கத்திருமேனி தாங்கி என்றும் பிரசன்னமாய் எழுந்தருளியிருப்போம். அந்த ஸ்தலத்திலே நீ சென்று அச்சிவ

லிங்கத் திருமேனியில் நம்மைப் பூசிக்கக் கடவாய்; சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகம் என்னும் கிருத்தியங்களைந்தையும் செவ்வேசெய்யும்செயல்வன்மையைஉனக்குத்தந்தருளுவோம்" என்று திருவாய் மலர்ந்தருளினர்.

அதன் வண்ணமாகவே உமாதேவியாரும் இத் தலத்துக்கு வந்து அப்பொழுது திருநாவலூர் கிலமாயிருப்பக் கண்டு, இரண்டு திருக்கண்களினின்றும் பாஷ்பம் பொழிய நெஞ்ச நெக்குருகிப் பரவசமாய்ச் சிரமேற்கரந்தாரணஞ்செய்து பக்தசநேசுவரர் திருவருளை நினைந்து தமது பக்கத்தில் தமக்குப்பணிபுரிந்து நின்ற சூலினியைப் பார்த்தருளினர். சூலினி உலக முதல்வியாகிய அம்மையாரது திருவுளக் குறிப்பையறிந்து தன்னுடையசூலத்தைப் பூமியிற் குத்தினள். உடனே சகல பாபங்களையும் அகற்றும் மகிமையுடையதாய்ப் பாதாள கங்கை சிவஞானிகளுடைய உள்ளம் போலத் தெளிந்து கதித்தெழுந்து நிறைந்தது. அதற்கு 'சாம்பூநத தீர்த்தம்' எனப் பெயர் தந்து பார்வதி தேவியார் எல்லாத் தேவ மாதர்களோடும் அத்தீர்த்தத்திலாடி, சூலினி, சரசுவதி, துர்க்கை, இலக்குமி முதலிய அத்தேவ மாதர்கள் சூழக் கோபுர வாயிலை யடைந்து, உள்ளே போய்த் திருமூலலிங்கப் பெருமானைப் பூசிக்க ஆலயத்தின் முன்னே எழுந்தருளி யிருக்கும் நாவலடியில் தனது மூத்த குமாரனுய விநாயகரைப் பார்த்தருளினர். இந்நாவல் மரமே இப்பதிக்கு ஸ்தலவிருக்ஷமாம். ஆகவே இதற்குத் திருநாவலூர் எனப் பெயர் வந்தது என்றுங் கூறுவர்.

விநாயகர், அம்மையாரது திருக்குறிப்பை அறிந்தவராகி, பாதங்களில் பணிந்து நந்தனவனம் சென்று, பரமசிவார்ச்சனைக்குரிய நறுமலர்களைக்கொய்து வந்து, தேவியாருக்கு உபகரிக்க, அம்மையார் பூசைக்கான உபகரணங்கள் யாவும் சேகரித்துக் கொண்டு, மாசி மாதத்தில் அபரபட்சத்தில் சதுர்த்தசி திதியில் மகாசிவராத்திரியில், முதலிரண்டு யாமங்களிலும் பூசையை விதிப்படியாக முடித்து, மூன்றுவது யாமத்தில் தமது இளையமைந்தனுய ஆறுமுகனைப்பார்க்க, கார்த்திகேயன் அம்மையாரது திருவுளக் குறிப்பையறிந்து சாம்பூநத தீர்த்தத்தின் பக்கத்தில், தமது வேலாயுதத்தினுற்குத்ததலும், பாதாளத்தின்றும் திவ்விய கங்கையானது வெளிவர, அதை உமை அம்மையார்கண்டு "சத்திபில தீர்த்தம்" என்று நாமந்தரித்து, அத்தீர்த்தத்தால் மூன்றுவது நான்காவது யாமங்களில் அபிடேகஞ்செய்து, பூசையைமுடித்து. பிரதக்ஷிண நமஸ்காரஞ்செய்து, சிரசின்மேற், கரகமலங்களைக்குவித்து, பரமசிவத்தைச் சோதிரூபமாகக்கண்டு,

"பணிமதிய நதியிதழி மலரொளிர் செஞ்சடிலமெனும் பவளக்காடு
மணிமகரக் குழைச்செவியு மகிழ்கருணை பெருகுவிழி வதனத்தேசுங்

திணிபுயமும் விடமிலங்கு மணிமிடரு மபயமெனச் சிறந்தகையு
மணிகழலுந் திருவடியும் வெண்பொடியா ழலவ்வடிவு மமர்ந்ததேவை.''
''நித்தியனை யுலகனைத்து நிறைந்தவுயிர் தொறுமொளிரு நிருவிகற்ப
வத்துவைமெய் யடியருள மகலாத பரம்பொருளை மனவாக்கெட்டாச்
சுத்தசெழுஞ்சுடரொளியைமறைமுடியினடனமிடுந்தொல்லைவாழ்வை
யத்தனைத்த னகத்திருத்தி யாநந்தப் பெருங்கடலு ளாழ்ந்திருளால்''

என்று கூறியவாறாக சிவாநந்தக்கடலுள் மூழ்கினார், சாமானிய ரான நரர்களின் தோத்திரத்துக்கிரங்கி அருள்புரியும் கருணைக்கடலாய சிவபிரான், நமது அம்மையார் பூசைசெய்யுங்கால் எத்தகைய வராக இருப்பர் என்பதை அளவிடவுங்கூடுமோ? அம்பலக்கூத்தர் அம்பிகையாருடைய பூசைக்கும், ஞானத்துக்கும் மகிழ்ந்து எளிவந்து விஷயபூதராய், அவரது இருதய புண்டரீக மத்தியில் தகராகாசத்தில், தமது நாதமாகிய திருச்சிலம் பொலிகேட்பித்துத் தமது அத்தியற்புத அபரிமிதாநந்த நடனசோதி சொரூபங்காட்டியருள, அம்மையார் அதில் விளைந்த ஆனந்தத்தேனையுண்டு இறுமாந்து சந்தோஷக்கடலில் மூழ்கினாராக. ஸ்வாமி புறத்தும் அப்படியே காட்சிதந்தருளத் திருவுளங்கொண்டு, அந்தர துந்துபிகள் முழங்கக்கந்தருவர்கள் இசைபாட, நாட்டியமகளிர் நாடகஞ்செய்ய, ஏவன் மகளிர்கள் சாமரைவீசத் தேவர்கள் 'அரகர' வென்று புஷ்ப மாரி பொழிந்தனர். வேதியர்கள் வேதங்களை ஓதினர். பக்தர்கள் யாவரும் களிக்கத்தக்க விதமாக, ஸ்வாமி, இடபாரூடராக வெளி வந்து காக்ஷிகொடுத்தருளினர். பார்வதிதேவியார், ஆநந்தபரவசராகி எம்பிரானுக் கெதிரேசெல்ல, எம்பிரான் நாயகியாரைத் தமது மார்போடுஇறுக ஆலிங்கனஞ்செய்து, காமாந்தகராகிய அவர் ஆலிங்கனத்தில், அதிமோகிதரானார் என்னும் சீருள் நாடகங் காட்டியருளினார். பின்னர் தேவியாரைப் பார்த்து ஈஸ்வரன் ''தேவி! ஹரிக்கமுடியாத நமது மனதை ஹரித்து, நமக்குமகா மனோஹரியமாய் நம்மை நினது மனக்கோயிலில் அடைத்து, உனது தியான மார்க்கத்தில் நம்மைவைத்தமையால் நினக்கு மனோன்மணி, என்னும் பெயர் வழங்குக நீபஞ்சகிருத்தியங்களைச் செய்யவும், உனது மனதில் எண்ணிய எண்ணிய காரியங்களை யெல்லாம் எண்ணிய எண்ணியவாறு இயற்றவும் நினக்கு வரமளித்தோம். அதுவுமன்றிப் பக்தஜனங்கள் நின்னையும் என்னையும் ஏககாலத்தில் ஏககொலுவிற் கண்டு சேவிக்கும்படி நீ நமது வாமபாகத்தில்மருவுக'' என்று அருளிச்செய்து, அம்மையாரைத் தமது அருட்கரங்களால் தூக்கி யெடுத்துத் தமது வாமபாகத்தில் மனமகிழ்ந்து இருத்தியருளினார். இவ்வைபவத்தைக்கண்டு தேவர்கள் யாவரும், மனக்களிப்புற்றவராகி நமஸ்கரித்து நின்றனர். அத்தேவர்கள் ' எம்பெருமானே! தேவரீர் ஓர் பக்கத்தும், அமையார் ஒரு பக்கத்தும் ஏக அவசரமாய் எழுந்தருளியிருக்கும் இந்த மகா மங்கள அருட் கொலுவை என்றும்

சுரர், நரர் முதலிய பக்த ஜனங்களெல்லாம் தரிசிக்கும் பொருட்டுத் திருவருள் செய்க" என்று பிரார்த்தித்து, அப்படியே வரமும் பெற்றுச் சென்றனர்.

அந்நாள் முதல் இத்திருநாவலூரில் தேவியார் பெயர் மனோன்மணி யென்று வழங்கிவருவதாயிற்று.

இப்பெற்றித்தாயதிருப்பதியின் கண்மகாவிஷ்ணு, சண்டேசுரர், கருடன், சுந்தரமூர்த்தி நாயனுர் முதலியவர்கள் பூசித்து மேன்மை பெற்றிருப்பதை பின்னர் விளக்குவாம். இத்தகைய புண்ணியம் வாய்ந்த இந்நகரில் ஆதி சைவ அந்தணர் குலத்தில் நம்பியாரூரர் என்ற சிவனடியார் தோன்றினர்.

ஆகவே, எவரேனும் எக்கருமத்தாலேனும் திருநாவலூருக்கு வந்து, கடவுளைத் தரிசனஞ்செய்து ஒருநாள் பொறுத்திருந்து புறப்படுவோர் இனிது வாழ்ந்து முடிவில் சிவபாதார விந்தத்தைத் தியானித்துப் பரகதி பெறுவர் என்பது நிச்சயம்.

## அரசமரம் வலம் வருதல்.

(திரு. அ. முத்தையப் பிள்ளை யவர்கள் கண்டாச்சிபுரம்)

அரச மரம், சைவ வைணவாதி சர்வசமயிகளும் தேவதா ஸ்வரூபமாகப் பாவித்து வணங்கி இஷ்ட சித்திகளை யடைவதாகிய தெய்வத் தன்மை வாய்ந்த ஓர் விருக்ஷம். தத்தமக்குள்ள வியாதிகள் தீரும்பொருட்டும், புத்திரப்பேறு வேண்டியும் மற்றுஞ் சிலபல காரியசித்தி பெறுதற்காகவும், கிரகதோஷ நிவர்த்திக்காகவும் அரசு சுற்றி வேண்டியவாறடைகின்றனர். இவ்வழக்கம் பண்டைக் காலந் தொட்டே நம் முன்னோர்களால் கையாண்டு வரப்பட்டுள்ளது. அரச மரம் வலம் வருதற்கு அமாவாசையோடு கூடிய சோமவாரம் மிகச் சிறந்தாகக் கொள்ளப்படுகிறது. மற்றும் சுப காலங்களிலும் நாள் ஒன்றுக்கு நூற்றெட்டு முறை ஒரு மண்டலமும் அல்லது தான் சங்கற்பித்த நாட்களும் சுற்றுகின்றனர். தேக நிலைக்குத் தக்கபடி வலம்வரலாம். அவ்வமயம் தங்கள் தங்களாலியன்ற தானங்களும் வழங்குதல் மரபு. ஏனைய மரங்களைக்காட்டிலும் இவ்விருக்ஷத்திற்கு இத்தகைச் சிறப்பு உண்டானதின் காரணம் யாதெனை ஆராய்வாம். அரச மரத்திற்குப் "போதி" என்னும் ஒரு பெயருமுண்டு. இதற்குப் போதத் (ஞானத்)தை யுடைய தென்பது பொருள். நைரஞ்சரை யென்னும் நதிக் கரையிலேயுள்ள "பனையைத் தோங்கிய பாகிலைப் போதி"யின் கீழிருந்து இருபத்தெட்டுத் தினங்களில் காம வெகுளி மயக்க மற்று மாரனையும் வெல்லும்

ஞானத்தைக் கௌதம புத்தர் அடைந்ததாக பௌத்த நூல்கள் கூறுகின்றன.

"வாடாப் போதி மரகதப் பாசடை
மரநிழ லமர்ந்தோ னெஞ்சம் யார்க்கும்
அருளின் நீந்தே னிறைந்து நனிநெகிழ்ந்து
மலரினு மெல்லி தென்ப வதனைக்
காமர் செவ்வி மாரன் மகளிர்
நெடுமா மழைக்கண் விலங்கி நிமிர்ந்தெடுத்த
வாளும் போழ்ந்தில வாயின
யாதோ மற்றது மெல்லிய வாறே"

"தாமநறுங் குழன்மழைக்கட் டளிரியலார் தம்முன்னர்க்
காமனையே முனங்கொலைத்தாற் கண்டோட்டம் யாதாங்கொல்"

என்னும் பௌத்த கவிகள் வாக்குமூலம் நோக்கத்தக்கது. போதி நீழலிற்பொருந்திபுத்தர் ஞானம்பெற்றமையின் அவ்விருக்ஷத்திற்கு, தப்பால் அடைந்தாரது அஞ்ஞானத்தை நீக்கி மெஞ்ஞானத்தை நல்குந் திறனுண்டென்பது தெற்றென விளங்கும்.

உத்தம தேவர் தம்முளுத்தமனாகிய சிவபெருமான் ஆன்மாக்கள் தரிசித்துய்யக் கொண்டருளிய திருமேனிகள் பலவற்றுள்ளும் சிறந்தது சிவலிங்கத் திருமேனியே அம்மூர்த்தி சொரூபத்தில் பிரம்மா, விஷ்ணு, ருத்ரன் ஆகிய மும்மூர்த்திகளும் அடங்கும். இதனை, நங்காழி கண்ணுடைய வள்ளலார்,

"பிரமன்கீழ் மாயனடுப் பின்றுகன்மே லீசன்
பருவுள்ள லிங்கத்தின் பாங்காம்"

எனக் கூறுகின்றார். சிவலிங்கத்தின் அடிப்பாகத்திற் பிரமனும், மத்திய பாகத்தில் விஷ்ணுவும் மேற் பாகத்தில் ருத்ர மூர்த்தியுமாக விளங்கும். இதனால் திருமூர்த்தி சொரூபமே சிவலிங்க மென்பது பெற்றாம்.

இனி, அதுபோலவே மரங்களெல்லாவற்றுள்ளுஞ் சிறந்தது அரசமரம். இதனை, 'அரசு' என்ற அதன் பெயராலறியக்கிடக்கின்றது. இவ்வரச மரமும் அடிப்பாகம் பிரம்ம ரூபமாயும் மத்திய பாகம் விஷ்ணு ரூபமாயும் மேற்பாகம் சிவரூபமாயும் விளங்குகின்றது. இதனை, நம்முன்னோர்கள் வலம் வந்து போற்றித் துதித்த,

"மூலதோ பிரம்மரூபாயா, மத்யதோ விஷ்ணு ரூபிணி
அக்கிரிதஸ் சிவரூபாயா, விருக்ஷ ராஜாயதே நம:

என்னும் ஸ்லோகத்தா லறியலாம்.

ஸ்ரீ கண்ணபிரான் நரனுக்குக் கீதோபதேசஞ் செய்யுங்கால் "தாருவுள் அஸ்வத்தமு மாவேன" எனக் கூறியுள்ளனர். இன்

னும் திருப்புல்லாணி என்னுந் திவ்யதலத்திலே ஸ்ரீ விஷ்ணுமூர்த்தியானவர் திருவரசாய் நின்றருள் செய்கின்றாரென்பது,

"பெருவயிறு கண்டமாலை யுதாவலி யண்டவாயு
பிரமிய கிரந்திசூலை தலைநோவும்
இருமலொடு தந்தவாயு குருடுசெவி டுஞ்சொ லூமை
யிவைகண்முத றொந்தரோக வினையாவும்
ஒருநொடியி லஞ்சியோடும் வறுமையொடு சஞ்சிதாதி
யுபரியி னடைந்தபாவ மனைவதாமும்
மருமலர் பிறந்தகோதை மருவிமகி ழும்புலாணி
வளரரசு கண்டபேரை யணுகாவே"

என்னும் ஆன்றோர் வாக்கு அறிவுறுத்தா நிற்கும். இக் கூற்றுக்களான் கடவுள் சொரூபமே ஆன்மாக்கள் அறிந்துய்வான் கருதி திருவரசாய் நிற்கின்றதென்பது புலன். அரசமரம் தானே பூவெழுத்தெழுந்திலாற் சுயம்புலிங்க மெனக் கொள்ளல் வேண்டும். தெய்வத்தன்மை வாய்ந்த இவ்விருக்ஷத்தை வலம் வருதலால் சிவலிங்கபூசையினாற்பெறும் எல்லாப்பலன்களூம்எளிதிற் பெறலாம். இவ்வுண்மையறியாதார் இது சாதாரண விருக்ஷம் என வணங்காமல் அசட்டை செய்வார்களென்று கருதியே அவர்கள் அம்மரத்தைவலஞ் செய்து வணங்கி நற்கதியடையும் பொருட்டு நம் பண்டைப் பெரியோர்கள் அரசடியில் நாகப் பிரதிஷ்டை செய்தும் விநாயகரைத் தாபித்தும் வணங்கும் வழக்கத்தை மேற்கொண்டுள்ளனர்.

ஆதலால் நாமெல்லோரும் அநேககோடி சிவராத்திரிக் கொப்பாகிய சோமவார அமாவாசையிலும் ஏனைச் சுபதினங்களிலும் தவறாமல் அரசு சுற்றி எல்லாம் வல்ல முழுமுதற் கடவுள் திருவருளைப் பெறுவோமாக.

---

## உயர்ந்தோர் கூறும் உறுதி மொழிகள்.

உலகில் காண்பதற்கு அரிதாயிருப்பது குணசீலம்.

குடும்பக்காரியங்களெல்லாம் உன்னுடையவையல்லவென்றும் கடவுளுடையவை யென்றும் கருது. அவருடைய ஆணைக்குக் கீழ்படியும் வேலைக்காரனாக நீ இங்கு வந்திருக்கிறாய். இக் கருத்தில் நிலை நிற்பவனுக்குத் தன்னுடையது என்பது ஏதுவுமில்லை.

கவலையற்றிருப்பவர்களுக்கு நித்திரை எளிதில்வருகிறது. அது போன்று பற்றற்றிருப்பவர்களுக்கு தியானம் எளிதில் கூடுகிறது.

துர்விஷயங்களில் செல்லும் மனதைக் காட்டிலும் வேறு சத்துருக்கள் எவருமில்லை. அம் மனதை வெல்லுதலே நாம் பரம புருஷனுக்குச் செய்யும் பெரிய ஆராதனையாம். ஸ்ரீராம கி. வி.

---

உ

# பசிப்பிணி.

(கண்டாச்சிபுரம், திரு, அ. முத்தைய பிள்ளை யவர்கள்.)

இறைவன் சிருஷ்டியிலடங்கிய பல ஜீவர்களும் தத்தம் வாழ்நாளிடையே பல பல விதத்தில் பயனுகர்கின்றனர். மக்கள் சேவகம், பயிர்த்தொழில்; கைத்தொழில், வர்த்தகம் ஆதிய செய்தும்; திரைகடலோடியும், அறநெறிகளாலும், கொலை, களவு, வஞ்சம், பொய், சூது ஆதிய மறநெறிகளாலும் பொருளீட்டுகின்றனர். இவைகளை யெல்லாம் யோசிக்குமளவில் எஞ்சா னுடம்பினை யோம்புதற்கே யன்றி வேறல்ல என்பது,

> "சேவித்துஞ் சென்றிரந்துந் தெண்ணீர்க் கடல்கடந்தும்
> பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும்—போவிப்பம்
> பாழி னுடம்பை வயிற்றின் கொடுமையால்
> நாழி யரிசிக்கே நாம்"

என்னும் நல்வழி வெண்பாவால் பெறப்படுகின்றது.

"யோசிக்கும் வேளையில் பசிதீரவுண்பது முறங்குவதுமாக முடியும்" என்றார் நம் தாயுமானார்.

மக்கள்யாக்கை உணவினாலாகிய பிண்டம். "உண்டி முதற்றே உணவின் பிண்டம்" என்பது புறநானூறு. உணவில்லாது ஒரு கணமும் உயிர் நிலையாது. உணவு கிட்டாதபோது பசியென்னும் பெரு வியாதி பீடித்து வருத்தும். முடியுடை மன்னரும், மொய்ம்புடை வீரரும், முற்றுந் துறந்த யோகிகளும், சித்தர்களும், முனிவர்களும், தபசிகளும் பசிநேரிட்டால் தங்கள் தங்கள் நிலை கெட்டுத் தவிக்கின்றனர்.

> "பூணும் பணிக்கல்ல பொன்னுக்குத் தானல்ல பூமிதனைக்
> காணும் படிக்கல்ல மங்கையர்க் கல்லநற் காட்சிக்கல்ல
> சேணுங் கடந்த சிவனடிக் கல்லவென் சிந்தைகெட்டுச்
> சாணும் வளர்க்க வடியேன் படுந்துயர் சற்றல்லவே"

என்ற பெரியார் வாக்கு ஈண்டு நோக்கற்பாலது.

முன்னொருகால் கௌசிக முனிவர் மழையின்மையாற் பஞ்ச மேற்பட்டு உணவு கிடையாது மெலிந்து நாயிறைச்சியைத் தின்ன முயன்று முதலில் ஒரு பகுதியைத் தெய்வங்கட்கு பலியிட, அதை உகந்த இந்திரன் மழை பெய்யச் செய்தனன் எனவும், அதனால் பஞ்சம் நிவர்த்தியாயிற் றெனவுங் கூறுவர். கௌசிகர் தவவலியுடையராயிருந்தும் பசிக்கொடுமையால் இதைச் செய்தனர் எனத் தெரிகிறது. "மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை, தானம் தவம் முயற்சி தாளாண்மை, தேனின்—கசிவந்த சொல்லியர் மேற் காமுறுதல் பத்தும், பசிவந்திடப் பறந்துபோம்" என்பது ஔவையாரின் அருள்வாக்கு.

"குடிப் பிறப்பழிக்கும் விழுப்பங் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉ
நாணணி களையு மாணெழில் சிதைக்கும்
பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி யென்னும் பாவி"

என்றார் பிறரும். தன்னாற்சார்ப்பட்டாரிடத்துள்ள எல்லா நன்மைகளையும் அழித்தற்கொடுமை பற்றிப்பசியைப் 'பாவி' என்றும் 'அழிபசி' யென்றும், இவ்வுடம்பினின்று ஞானவொழுக்கங்களையழித்து அதனால் வருமுடம்புக்குந் துன்பஞ் செய்தலின் 'தீப்பிணி' என்றும் பெரியோர் கூறியிருக்கின்றனர். பசிப்பிணி ஒருவனைப் பற்றியதும் அவனது குணங்களெல்லாம் பேதப்பட்டு மனந் தடுமாறிப் புத்தி கெட்டுச் சித்தங் கலங்கி வலியழிந்து பிராணன் சுழல்கின்றது. கண் பஞ்சடைந்து குழிந்து போகின்றது. காது கும்மென்று செவிடு படுகின்றது. நாவுலர்ந்து வறள்கின்றது. நாசிகுழைந்து அழல்கின்றது. தோல் மெலிந்து ஸ்மரணை கெடுகின்றது. கைகால்கள் சோர்ந்து துவளுகின்றன.* வாக்குத் தொனி மாறிக் குளறுகின்றது. பற்கள் கிட்டுகின்றன. மலசல வழிகள் வெதும்புகின்றன. மேனி கருகுகின்றது உரோமம்வெறிக்கின்றது. நரம்புகள்குழைந்து நைகின்றன.* நாடிகள் கட்டுவிட்டுத் தளர்கின்றன. எலும்புகள் கருகிப் பூட்டுகள் நெக்குவிடுகின்றன. இருதயம் வேகின்றது. மூளை சுருங்குகின்றது சுக்கிலம் வெதும்பி வற்றுகின்றது. ஈரல் கரைகின்றது. இரத்தமும்சலமும் சுவறுகின்றன. மாமிசங்குழைந்து தன்மைகெட்டு வயிறு பகீலென்றெரிகின்றது தாப சோபங்கள்

மேன்மேலு முண்டாகின்றன. உயிரிழந்துவிடுதற்கு மிகவும் சமீபித்த அடையாளங்களும் அனுபவங்களும் தோன்றுகின்றன. இந்நிலையில் மேற் கூறிய மானமாதிய பத்தும் எவ்வாறு நிற்கும்? இத்துணைக் கொடுமைகளையும் ஏககாலத்தில் உண்டாக்கக் கூடிய நோய் வேறொன்று மில்லை யென்று துணிந்து கூறலாம்.

பிராணவஸ்தையை விளைக்கும் இக்கொடிய வியாதிக்குத் தக்க மருந்து ஆகாரம் ஒன்றே. வேறெவ்வித ஔடதத்தாலும் விட்டு நீங்காது. இதனாலேயே அன்னத்திற்கு "ஆருயிர் மருந்து" எனவும் ஒரு பெயர் ஏற்பட்டுளது. பசிநோய்க்குத் தக்க ஔடதமாகிய உணவை யருந்தியபின் உயிர்நிலைபெறுதலால் "மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லா, முண்டி கொடுத்தோ ருயிர் கொடுத்தோரே" எனக் கூறப்பட்டிருக்கிறது. பிறநோய்களை ஒருமுறை யருந்தும் மருந்தினாலேயே மறுமுறைவாராமல் தடுத்துவிடலாம். இந்நோய்க்கு ஒவ்வொரு வேளையும் அன்னமாகிய ஔடதம் கொடுத்துத்தீரவேண்டும். இது குறித்தே நம் ஔவைப் பிராட்டியார்,

"ஒருநா ளுணவை யொழியென்றா லொழியாய்
இருநாளுக் கேலென்றா லேலாய்—ஒருநாளும்
என்னோ வறியாய் இடும்பைகூர் என்வயிறே!
உன்னோடு வாழ்தல் அரிது".

"துன்பம் பொதிந்த எனது வயிறே! இன்று உணவுகிடைக்க வில்லை. இன்னொரு பொழுது உணவை நீக்கி யிரு என்றால் ஒழிக்கிறாய். இன்று அதிகமான உணவு கிடைத்திருக்கிறது. இரண்டு தினங்கட்குச் சேர்த்து ஏற்றுக்கொள் என்றால் ஏற்கமாட்டாய். ஒருபோதும் எனது துன்பத்தை நீ அறிந்து கொள்ளாய். யான் உன்னோடு கூடி வாழ்வது மிக அருமை எனக் கூறுகின்றார். இதனால் பசிப் பிணியாலே உணவுதேடி ஒவ்வொருவரும் அலைந்து திரியவேண்டியவராகின்றனர். "ஆக்கைக் கேஇரை தேடி யலமந்து" என்றார் திருநாவுக்கரசர்.

ஆயினும் காணார், கேளார், கான்முடமானார், பேணுமாக்கள், பேசார், பிணித்தோர் ஆதிய மக்கள் உழைத்துணவு தேடுந் திறனின்றி வருந்துவார்கள். அத்தகையோர்க்கு, சரீரதிடமாயுழைத்து உணவு தேடுவோர் ஒரு பகுதியை இட்டு உண்ணல்வேண்டும். அவ்வாறு பகிர்ந்துண்ணு மியல்புடையானைப் பசிநோயணுகாது. ஏனெனில்? தனக்கு மருத்துவன் தானே யாதலின். இதனை,

"பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னும்
தீப்பிணி தீண்ட லரிது"

என்னும் வள்ளுவர்வாக்காலறிக. தவத்தால் வல்லவராவோர் தம் பசியையும்பிறரதுபசியையும்தீர்க்கமாட்டாதவராவர். பிறர்க்கிட்டுண்போர் தம் பசியையும் பிறரது பசியையும் நீக்கவல்லவராவர் இதனால், அத்தவவலிமையாலும் பிறர்பசிநோக்குவாரது வல்லமை மிகச்சிறந்ததாம். பசிநீக்குதலாகிய புண்ணியமே பொருள்பெற்றான் தனது பொருளைச் சேமித்து வைக்குமிடமாம். ஏனெனில் அப் புண்ணியமாகிய பொருட்பலன் தனக்கே வந்துசேர்தலின்.

"அற்றா ரழிபசி தீர்த்த லஃதொருவன்
பெற்றான் பொருள் வைப்புழி"

என்பதிற்காண்க இக்கொடியநோய் நம்மைப்பற்றாதிருக்க வேண்டுமானால் நாம் பசித்தோர் முகம்பார்த்து இயன்றவாறு உணவளித்தலாகிய புண்ணியத்தைச் செய்துவருதலே முக்கியகடமை யாகும்.

"நட்டமாடிய சுந்தர நங்கை யெம்பிராட்டி
அட்டபோனகம் பனிவரை யனையவாய்க் கிடந்த
தொட்டுவாய் மடுத்திடவு மென்சுடு பசிதணியா
திட்டுணாதவர் வயிறுபோற் காந்துவ தென்றான்"

எனவரும், திருவிளையாடற் செய்யுளையும். "பசித்தவர்க் கிட்டுண்ணான் பாவியாமே" எனவரும் பெரியார் வாக்கையும்,

சிந்தித்து 'அன்னம் பகிர்ந்திங்கிலந் தோர்க்குதவி செயுஞ் சென்ம' மெடுத்தமக்கள். எருதுகள் பூட்டிஉழுது பயிரிடுதலாலுண்டான உணவுப்பொருள்களைப்பலர்க்கு உபகரித்துப் பல்லாரோடுண்டு 'எந்நாளும் இரப்பவர்க்கிட்டு' 'அன்னமிடுமின் அறநெறியைக்கைப் பிடிமின்' 'ஐயமிட்டுண்' என்பனவாதிய உறுதிகளைக் கைகொண்டொழுகுதல் வேண்டும்.

விட்டு நீங்காது மாறி மாறி வருகின்றதால் "விடலரும் பசிநோய்" என்றார் வைராக்கியதீப நூலார்.

"தாது வருஷம் வரப்போகிறதே, சென்ற தாதுவில் உண்டான பஞ்சம் வந்துவிடுமோ? வந்தால் நாம் என்ன செய்வது?' எனஎண்ணி இப்போதே துயருற்றழும் ஏழைமக்களது துன்பத்தை இறைவன் கருணைகூர்ந்து நீக்கியருளுமாறு அவனது திருவருளை நாம் அநவரதஞ் சிந்திப்போமாக!

பாரக மடங்கலும் பசிப்பிணி யறுக!

---

௨

# சுலோக பஞ்சக விஷயம்.

(சென்ற மாதத் தொடர்ச்சி)

(சிவபாரத்துவ நிரூபண சிகாமணி
ப்ரொபெஸர் திரு, தி-மா- ஸ்ரீநிவாஸ ஐயங்காரவர்கள்)

இனிப், பர்க்கச் சொல்லைப் பர்கஸ் என்று வைத்துக் கொண்டால் அப்போதும் அது சிவதேஜஸையே சுட்டும். பிரத்தியக்ஷ தேஜஸ்களுள் ஆதித்திய தேஜஸே அதியுத்கிருஷ்டமானது. சிவதேஜஸ் ஒன்றையே ஆதித்திய தேஜஸ் என்றும் அதனினும் மேம்பட்ட தேஜஸ் என்றும் வேதம் வர்ணித்துள்ளது. 'ஆதித்ய வர்ணம்' (ஆதித்திய நிறமுடையவனை), 'சிவ ஏவகேவல: தத்க்ஷரம் தத்ஸவிதுர் வரேண்யம்' (கேவலம் சிவமொன்றே. அது அக்ஷரம். அது ஸவிதாவுக்கு மேலானது) என்ற ச்வேதாச்வதரம் காண்க. கடல் வண்ணன், கருவண்ணன், முகில் வண்ணன், காயாம்பூ வண்ணன், புறம்போலுள்ளங்கரியான் என்பன வாதிய இலக்கணங்களையுடைய நாராயணன் முதலிய பிறதேவர்கள் அத்துணைச் சிறந்த ஒளியுடையவர்களாக மாட்டார்கள். எனவே ஆதித்தியனுடைய இருதயத்தில் அவர்கள் இருப்பதுமில்லை ஆனால், கூரேச விஜயம் என்னுஞ் சுவடி சூரிய மண்டலத்திலிருப்பவன் நாராயணன்றா னென்பதை 'த்யேயஸ்ஸதா ஸவித்ரு மண்டல மத்திய வர்த்தி நாராயணஸ் ஸரஸிஜாஸந ஸந்நிவிஷ்ட: கேயூரவாந் மகரகுண்டலவாந் கிரீட ஹாரீ - ஹிரண்மயவபு: த்ருத சங்க சக்ர தஸ்யயதாகப்யாஸம் புண்டரீக மிவாக்ஷிணீ' என்று சாந்தோக்கியங் கூறுவதாகச் சொல்லி நிரூபிக்கப் பார்க்கும். சாந்தோக்யத்தில் 'தஸ்யயதா கப்யாஸம் புண்டரீக மேவமக்ஷிணீ' என்பது மட்டும் உண்டும். அம் மேற்கோளின் மற்ற பாகங்களனைத்தும் அவ்வுபநிஷத்திற்கிடையா.

சிலர் சூரிய நாராயணன் என்ற பிரயோகத்தைக்கொண்டு சூரியாந்தரியாமி நாராயணனே யென்பர். அது தப்பு. சூரியர்கள் பன்னிருவர் என்றொரு கணக்குண்டு. அவருள் விஷ்ணு வென்று பெயருள்ள சூரியனொருவனிருக்கின்றான். சூரிய நாராயணனென்பது அந்தச் சூரியனாகிய விஷ்ணுவையே குறிக்கும். அவ்வுண்மையை 'யாக்ஞவல்க்யோஹவை மஹாமுநிராதித்ப லோகம் ஜகாம தமா

நித்யம் நத்வாபோ பகவந் நாதித்யாத்ம தத்வ மநுப்ரூஹீதி. ஸஹோவாச நாராயண:' (யாக்ஞ வல்கிய மஹாமுநிவர் ஆதித்திய லோகம் புகுந்தனர். அவ்வாதித்தியனை அவர் வணங்கிப் பகவானே! ஆதித்தியனே! ஆத்தும தத்துவத்தைக் கூறுதியென நாராயணன் கூறுகின்றனன்) என்ற மண்டலப்ராஹ்மணத்தாலுந் தெளிக. சிவ சூரியன் ராமச்சந்திரன் என்ற பிரயோகங்களும் பிரசித்தம். சிவ சூரியன் என்பதற்குச் சிவனை அந்தரியாமியாகவுடைய சூரியனென்றும், ராமச்சந்திரன் என்பதற்கு ராமனை அந்தரியாமியாகவுடைய சந்திரனென்றும் பொருளுரைத்தல் சிறக்கும். விஷ்ணுவைப் பார்வதியின் புருஷக் கோலமென்று உபசரித்தலுமுண்டு. 'போகேபவாநீ புருஷேச விஷ்ணு: - க்ரோதேச காளீ சமரேச துர்க்க:' என்பது காண்க. பார்வதியைச் 'சந்த்ர மண்டல மத்ய வர்த்திநீம்' என்கின்றது த்ரிபுராதாபிநீ. ஆகையால் ராமச்சந்திர னென்பதுவிஷ்ணுவைச் சந்திரமண்டல மத்தியவர்த்தி யென்பதைக் காட்டிற்றென்க.

காயத்திரி மந்திரத்தைப்பிராமணர்கள் ஜபிப்பார்கள். அவர்கள் வணங்குந் தெய்வமும் பிராமண தெய்வமாகவே யிருக்கவேண்டும். 'ஈசாந: ......ப்ரஹ்மணோதிபதி: .......ஸதாசிவோம்' என்னும்நாராயணத்தால் உருத்திரனே தேவர்களுட் பிராமண னென்பது விளங்கும். மனுஸ்மிருதியும் 'விப்ராணாம் தைவதம் சம்பும் க்ஷத்ரியாணாந்து மாதவ: வைச்யாநாந்து பவேத் ப்ரஹ்மா சூத்ராணாம் கணநாயக:' (பிராமணருக்குத் தெய்வம் சிவன். க்ஷத்திரியருக்குத் தெய்வம் விஷ்ணு. வைசியருக்குத் தெய்வம் பிரமன். சூத்திரருக்குத் தெய்வம் இந்திரன்) என்றது.

ப்ருஹஜ்ஜா பாலம் 'சிவ வக்ஷஸ்திதம் நகே நாதாய ப்ரணவே நாபிமந்த்ர்ய காயத்ர்ய காயத்ர்யா பஞ்சாக்ஷரேணாபி மந்த்ர்ய ஹரிர் மஸ்தக காத்ரேஷு சமர்ப்பயேத்' (சிவபிரான் தனதுமார்பிலிருந்து பஸ்மத்தை நகத்தா லெடுத்துப் பிரணவம் காயத்திரி பஞ்சாக்ஷரம் இவற்றானே யபிமந்திரித்து விஷ்ணுவின் சிரசுமுதலிய அங்கங்களிற் பூசி) என்றதாலும், பஸ்மஜாபாலம் 'த்யக்த்வா பஸ்மதாரணம் ந காயத்ரீம் ஜபேத்' (பஸ்மதாரண மின்றிக் காயத்திரியை ஜபித்தல் கூடாது) என்றதாலும் காயத்திரி சிவ சம்பந்த முடையதாதல் காண்க.

(வரும்)

# தொண்ணூற்றூறார் நகரத்தார் கூட்டம்.

இவ்வாண்டு ஆனித்திங்கள் சுருஉ கோவிலூர் மடாலயத்தில் கூடினர். பலவூர்களிலிருந்தும் தனவைசிய நகரத்தார் நானூறு பேர்கட்கு மேல்வந்திருந்தனா. காரைக்குடி மீனாட்சி சுந்தரர்வித்தியாசாலைமாணவர்கள் கடவுள்வாழ்த் தக்கூறினர். தேவகோட்டைஜமீந்தா ரவர்களைத் தலைமை வகிக்கும்படி திருவாளர்களான:- கண்டனூர், வயி. ராம. அரு. இராமநாதச் செட்டியார்பிரேரேபிக்க, காரைக்குடி நா.கு.இராமநாதச்செட்டியார் ஆமோதிக்க சோழபுரம் சுப. க. அ. இராமநாதச் செட்டியார் ஆதரிக்க திருவாளர் அழ. அரு. ராம. வெள்ளையன் செட்டியார் தலைமை வகித்தார்கள்.

## தலைவர் முன்னுரை:—

அன்பார்ந்த சமூகத்தினர்களே!

இங்கு கூடியிருக்கின்ற தொண்ணூற்றூறார் நகரத்தார் அவர்களின் கூட்டத்திற்கு என்னைத் தலைமை வகிக்கும்படி விரும்பியதற்கு மிகவும் நன்றியறிதலுள்ளவனாக இருக்கிறேன். இப்பெரிய கூட்டத்திற்குத் தலைமைவகிக்கும் பதவி எனக்களித்ததற்கு என் மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். நாம் இங்கு கூடியிருக்கும் காரணத்தை நகரத்தார் எல்லோரும் அறிவீர்கள். இந்தியா மசோதாவில் நமக்கு ஏற்படவிருந்த இன்னல்களை நிவர்த்திசெய்த அரசாங்கத்தார்களுக்கும் அவர்களிடம் நமது குறைகளை எடுத்துச் சொல்ல நமது டாக்டர் ராஜா சர் அண்ணாமலை செட்டியாரவர்களின் தலைமையில் சென்றுவந்த தூதுகோஷ்டியாரவர்களுக்கும் நமது நன்றியைத் தெரிவித்துக்கொள்ள வேண்டியது அவசியம். அதுபற்றி நமது சகோதரர்கள் பல தீர்மானங்களைக்கொண்டு வருவார்கள். அவர்கள் இவ்விஷயங்களைப்பற்றி விரிவாகச் சொல்லுவார்கள்.

கனம் டாக்டர் ராஜா சர் அண்ணாமலை செட்டியாரவர்கள் பர்மா இந்திய தூதுசம்பந்தமாக மேன்மைதங்கிய நகரத்தாரவர்களுக்கு விஞ்ஞாபனம் செய்து உவகையூட்டினர். ஷை விஞ்ஞாபனம் நம் சிவநேசன் ஆடித் திங்களில் வந்துளது.

அட்வகேட் மகா-ள-ள-ஸ்ரீ கா. இராமநாதச் செட்டியாரவர்கள் 'தூது வரலாற்றுரை' கூறினர். அது வருமாறு:—

தலைவரவர்களே!

நம் சமூகப்பெரியார்களே!

இந்தியர்களுக்கும்நம்மவர்களுக்கும் பர்மாவிலுள்ளஉரிமைகளைப்பாதுகாக்க நகரத்தாரவர்கள்நியமனம்செய்த தூதுகோஷ்டியில், என்னையும் ஒரு பொருட்டாக நினைத்து மெம்பராகத் தேர்ந்தெடுத்தமைக்கு, யான் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். என்பால் வைத்த அன்பால் எனக்கு இப்பதவி தந்ததும் அதனால் நம் சமூகத்தினருக்கு யான் சிறு தொண்டாற்ற சமயம் நேர்ந்ததும் சமூகத்தொண்டுசெய்யக் கடமைப்பட்ட யான் செய்த சிறியதோர் ஊழியத்தை நகரத்தாரவர்கள் பேரன்பால் பெரி

தாகப் பாராட்டுவதும், யான் என்றும் மறக்கற்பாலதன்று. இது சமயம் எனது நூதுகோஷ்டித்தலைவர் டாக்டர் ராஜா சர் அண்ணாமலை செட்டியாரவர்கள் லண்டனில் நடந்த வேலைகளைப் பற்றி விரிவாகக் கூறிவிட்டபடியால், அவ்வேலைகளின் முடிவைப்பற்றி மட்டும் யானும் விளக்கிக்கூற விரும்புகிறேன்.

கூட்டுக் கமிட்டி அறிக்கை வெளியானதும், நாம் கோயிலூரில் இது விஷயமாக முதலில் கூடினோம். அச்சமயம் யான் விவரமிக்க கூட்டுக் கமிட்டி அறிக்கை 473வது பாராவைப் பற்றி பேசியதும், நாம் செய்த தீர்மானங்களும் ஞாபக மிருக்கலாம். அப்பொழுது இந்தியா மசோதா வெளியாகவில்லை. அப்பொழுது நாம் சொல்லிக்கொண்ட குறை இரண்டு. அவற்றில் ஒன்று பர்மா சட்டசபைக்கு இந்தியர்கள் பர்மாவுக்குப் போதலை தடை செய்ய அதிகாரம் கொடுப்பது.

மற்றொன்று பர்மா சட்டசபைக்கு நிலசம்பந்தமான சட்டங்கள் செய்ய அதிகாரம் கொடுப்பது. நாம் இந்த இரண்டுவகை அதிகாரத்தையும் பர்மா சட்டசபைக்குக் கொடுக்கப்படாதென்று கேட்டுக் கொண்டோம். அத்துடன் நம்மவர்கள் உரிமையை என்றும் பாதுகாக்க பர்மா சட்டசபையில் நம்மவருக்கு ஒரு ஸ்தானமும் கேட்டோம். தூதுகோஷ்டியை நியமித்த பின் இந்தியா மசோதா வெளியிடப்பட்டது. அதை நாங்கள் ஆராய்ந்தபோது அதில் மற்றொரு விஷயம் காணப்பட்டது. பிரிட்டிஷ் இராஜ்யத்தில் வாழுகிறவர்களுக்குத்தந்திருந்த உரிமைகளும், ஸமஸ்தானத்தில் குடியிருப்பவர்களுக்குக் கிடைக்காமலிருந்தது. இந்தியா மந்திரியிடம் தெரிவித்துக் கொள்ளவேண்டிய முக்கியமான விஷயங்களில் இதுவும் ஒன்றாயிற்று. இந்தியா மசோதாவில் நிலசம்பந்தமாய் பர்மா சட்ட சபைக்குள்ள அதிகாரத்தை விவரித்த செக்ஷன் நமக்கு மிகவும் பாதிக்கக் கூடியதாக விருந்தது. கூட்டுக் கமிட்டி அறிக்கையை வாசித்தபோது நாம் இவ்வகையான அதிகாரம் மசோதாவில் இருக்கக் கூடுமென்று எண்ணவில்லை. இந்தியா மசோதாவில் 435 செக்ஷன் பிரிவு 2 (a) சாரத்தை மொழி பெயர்த்துத் தந்தால் தங்களுக்கு பர்மா சட்ட சபைக்குக் கொடுத்த அதிகாரத்தின் போக்குத் தெரியும். அந்த செக்ஷன் சொல்லுவதாவது:—

"விவசாயிகள் அல்லாதாருக்கு விவசாய நிலங்களை விற்பதையும் ஈடுவைப்பதையும் தடுக்க பர்மா சட்டசபைக்கு அதிகாரம் உண்டு இந்த அதிகாரத்தைக் கொண்டு, பர்மா சட்டசபை ஒரு சட்டம் செய்து விவசாயிகள் அல்லாதாருக்கு நிலங்களை விற்றலும் ஈடு வைத்தலும் செல்லாமல் செய்துவிடலாம். அவ்வாறானால் நம்மவர்கள் கைக்கு வந்த நிலங்களை நாம் விவசாயிகள் தேடி விற்கவேண்டும். பிறருக்கு விற்க முடியாது.

இம்மாதிரி இந்தியா மசோதாவில் நில சம்பந்தமான குறை அதிக இடைஞ்சல் விளைவிக்கக் கூடியதாகத் தெரிந்தது.

நாங்கள் இங்கிலாந்து சென்றதும் கனம் இந்தியா மந்திரியிடமும் மற்ற உத்தியோகஸ்தர்களிடமும் எங்கள் கோரிக்கைகளைத் தெரிவித்துக் கொண்டோம். அவைகளில் முக்கியமானவை:—

(1) பர்மாவுக்கு இந்தியர் போதலைத் தடுக்க பர்மா சட்டசபைக்குக் கொடுத்த அதிகாரத்தை எடுத்துவிடவேண்டும்.

(2) நில சம்பந்தமாக மறைமுகமாகவோ, வெளிப்படையாகவோ ஜாதி சமய வித்தியாசம் பாராட்டி சட்டம் செய்ய பர்மா சட்டசபைக்கு அதிகாரம் கொடுத்திருப்பதை எடுத்துவிட வேண்டும்.

(3) பிரிட்டிஷ் இந்தியாவிலிருந்து பர்மா சென்றவர்களுக்கு என்ன உரிமைகள் இந்தியா மசோதாவில் சொல்லியிருக்கிறார்களோ அதே உரிமைகள் இந்திய சமஸ்தானங்களிலிருந்து சென்றவர்கட்கும் கொடுக்கவேண்டும்.

(4) நம் ரெங்கோன் நாட்டுக்கோட்டைச் செட்டியார் சங்கத்திற்கு ஒரு பிரதிநிதித்துவம் வேண்டும்.

(5) கூட்டுக் கமிட்டி அறிக்கையில் நம்மவர்களைப் பற்றி தாழ்த்திக் கூறியிருப்பது ஞாயமில்லை.

நாங்கள் இந்தக் காரியத்தில் சித்திபெற எடுத்துக்கொண்ட முயற்சிகளைப் பற்றி யான் இப்பொழுது கூறவில்லை. ஆனால் இம்முயற்சியால் என்ன பலன் கிடைத்தது என்பதை மட்டும் கூறுகிறேன்.

1. பர்மாவுக்கு இந்தியர்களும் ஆங்கிலேயரைப் போன்று தடையின்றிப் போக உரிமையிருக்க வேண்டுமென்றும் பர்மா சட்டசபைக்கு அது விஷயத்தில் கொடுத்த அதிகாரத்தை எடுத்துவிடவேண்டும் என்றும் கேட்டதற்கு இந்தியா மந்திரி, இந்தியக் கூலிகள் பர்மாவுக்குச் செல்வதைத் தடுக்கவே இந்த அதிகாரம் கொடுத்திருக்கிறதென்றும், கூலி என்பதை விளக்கி வரையறுத்து இந்தச் சட்டத்தில் எழுதுவது முடியாத காரியமென்றும் ஆனால் கவர்னருக்குக் கொடுக்கும் அதிகாரப் பத்திரத்தில் அவர் கூலியைத் தவிர ஏனைய இந்தியர்களைப்பாதிக்ககூடிய மசோதாவுக்கு அனுமதி கொடுக்கப்படாதென்று எழுதலாமென்றும் சொன்னார். இதே விஷயமாகப் பார்லிமெண்டில் கவர்ன்மெண்டு தரப்பில் பேசிய அட்டர்னி ஜனரல் சொன்ன பதிலில் நமக்கு முக்கியமான சில பாகத்தை மொழி பெயர்த்துத் தருகிறேன்.

"ஜாதி வித்தியாசம் பாராட்டியும், பர்மாவில் தொழிலோ வியாபாரமோ செய்துவந்த இந்தியர்களைப் பர்மாவுக்கு வருதலைத் தடை செய்யக் கூடியதுமான சட்டத்திற்கு கவர்னர் அனுமதி கொடுக்கக் கூடாது என்று இன்ஸ்டுருமெண்ட் ஆப இன்ஸ்டிரக்ஷனில் சொல்லப்போகிறோம். இந்த விஷயத்தை சட்டத்தில் சேர்ப்பதானால் (unskilled lobour) அன்ஸ்கில்ட் லேபர் என்பதை வரையறுக்கவேண்டும். அது எங்களால் முடிந்த காரியமாகத் தோன்றவில்லை. ஆனால் அவ்விஷயத்தை அதாவது கவர்னருக்குக் கொடுக்கும் அறிக்கைப் பத்திரத்தில் சொல்லுவது சுலபம்". ஆனால் இன்னும் கவர்னருக்குக் கொடுக்கும் அறிக்கைப் பத்திரம் வெளியாகவில்லை. இந்தியா மந்திரி தூதுகோஷ்டிக்குக் கொடுத்த வாக்குப்படிக்கும் பார்லிமெண்டில் அட்டர்னி ஜனரல் சொல்லியபடிக்கும் கவர்னருக்குக்கொடுக்கும் அறிக்கையில் கூலியைத் தவிர பிற இந்தியர் பர்மாவுக்குப் போதலைத் தடுக்க ஏற்படும் சட்டத்திற்குக் கவர்னர் அனுமதி கொடுக்கலாகாது என்று சொல்லுவார்கள்.

(2) நிலசம்பந்தமாக இந்திய மசோதாவில் எவ்வாறு இருந்ததென்று முன்னர் சொன்னேன். இந்திய மசோதா முன்னிருந்தபடியிருந்தால் நம

நிலங்களை நாம் விற்பதற்குத் தடைகள் ஏற்படலாம். ஆனல் இப்பொழுது அந்த செக்ஷனில் சில திருத்தங்கள் செய்திருக்கிறார்கள்.

"விவசாயிகள் தங்களுக்குச் சொந்தமான நிலங்களை விவசாயிகள் அல்லாதாருக்கு விற்பனையையோ, ஈடு வைப்பதையோ தடுக்க பர்மா சட்ட சபைக்கு அதிகாரமுண்டு".

இம்மாதிரி திருத்தப்பட்ட செக்ஷனில் இருக்கும் விஷயத்திற்கும் முன் செக்ஷனிலிருந்த விஷயத்திற்கும் மிக வேறுபாடு உண்டு. மசோதாவிலுள்ள செக்ஷன் நம் நிலங்களை விற்பதைத் தடைப்படுத்த அதிகாரம் கொடுக்கிறது. இப்பொழுது இருக்கும் செக்ஷன் விவசாயிகள் தங்கள் தங்கள்நிலங்களை விற்பதைத் தடை செய்ய அதிகாரம் கொடுக்கிறது. இந்த செக்ஷன் பர்மா சட்டசபைக்கு அதிகாரத்தைக் கொடுக்கிறது; அந்த அதிகாரத்திற்கு ஒரு எல்லையும் கட்டியிருக்கிறது. அதன்படி பர்மா சட்ட சபையாருக்கு விவாசாயிகள் தங்கள் நிலங்களை விவசாயிகள் அல்லாதாருக்கு விற்பதையோ, ஈடு வைப்பதையோ தடுக்கவும் வேறுநிபந்தனைகள் ஏற்படுத தவும், அதிகாரம் உண்டு. இது சம்பந்தமாகப் பர்மா சட்டசபைக்கு வேறு அதிகாரம் இல்லை. பர்மா சட்ட சபையார் இந்த அதிகாரத்தைக் நடந்து நமக்கு யாதொரு இடையூறும் விளைக்கமுடியாது. அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட அதிகார வரம்புக்கு உட்பட்டு என்ன செய்யப்போகிறார்கள் என்று இப்பொழுது சொல்ல முடியாது.

நம் கைக்கு வந்த நிலங்களை விற்பதிலும், ஈடு செய்வதிலும் நமக்கு ஒருவிதத் தடையும் பர்மா சட்டத்தில் ஏற்பட மார்க்கமில்லை என்று முதலில் தெரிந்துகொள்ளவேண்டும் இப்பொழுது நமக்கு ஈடாயிருக்கும் நிலங்கள் பர்மா சட்டசபையார் இனி சட்டம் கொண்டுவந்து பாஸ்செய்வதற்குமுன் நிலங்கள் நம்கைக்குவந்துவிட்டால் சட்டசபையார் அவைகளைப் பற்றியும் நமக்கு ஒரு இன்னல் விளைக்க முடியாது. நாம் இனிக் கொடுக்கும் கடனாய் இருந்தாலும் சரி அவைகளுக்கு நிலம் பர்மாவில் சட்டம் ஏற்படு முன் கைக்கு வந்தவிட்டால் அந்நிலங்களை விற்பதில் இடைஞ்சல் ஒன்றும் இல்லை.

3. பிரிட்டிஷ் இந்தியாவில் குடியிருக்கும் இந்தியருக்குள்ள உரிமைகள் கூட இந்திய சமஸ்தானத்தவர்களுக்கு இல்லாது இருந்தது. அதைக் கவர்ன்மெண்டார் தூது கோஷ்டியாரின் வேண்டுகோளின்படி ஒரு திருத்தம் கொண்டுவந்து பிரிட்டிஷ் இந்தியர்களுக்கு உள்ள உரிமையை இந்திய சமஸ்தானங்களில் உள்ளவர்களுக்கும் அளித்திருக்கிறார்கள்.

4. நம் ரெங்கோன் நாட்டுக்கோட்டையார் சங்கத்திற்கு சட்ட சபைக்குப் பிரதிநிதி அனுப்பும் உரிமை கொடுத்திருக்கிறார்கள்.

கூட்டுக்கமிட்டியில் நம்மவர்களைப்பற்றி இழிவாகச்சொல்லியிருந்ததை நாங்கள் அரசாங்கத்தாரிடம் தெரிவித்ததற்கு, கனம் இந்தியா மந்திரி கூட்டுக் கமிட்டி அறிக்கையில் 473-வது பாராவில் சொல்லப்பட்ட வார்த்தைகள் நம் சமூகத்தாரை இழிவுபடுத்தும் எண்ணத்தோடு கூறியதில்லை என்றும், அதில் உபயோகித்த வார்த்தைகளுக்குத் தாம் மிகவும் வருந்துவதாகவும் கூறினர்.

இதைத் தவிர இந்தியா உதவி மந்திரி பட்லர் அவர்கள் காமன்ஸ் சபையிலேயே நம் ரெங்கூன் சங்கத்திற்குப் பர்மா சட்டசபையில் ஸ்தானம் தரும்போது பேசியசமயத்தில் நம்மைப் பற்றிச்சில வார்த்தைகள் புகழ்ந்து சொல்லியிருக்கின்றார்.

நாம் செய்துகொண்ட ஒவ்வொரு கோரிக்கைக்கும் இம்மாதிரியான பலன்கள் கிடைத்தன. நமக்கு இவ்வளவேனும் பலன் கிடைத்தமைக்குக் காரணம் என்ன?

1. நமது கோரிக்கைகள் மிகவும் நியாயமானவை. நமது கட்சியின் உண்மையும் ஞாயமும் நமக்குப் பெரிய ஒத்தாசையாக இருந்தன.

2. கனம் இந்தியா மந்திரியும் இவ்விஷயத்தில் கவனம் செலுத்தி நாங்கள் சொல்லுவதை அன்புடனும் அமைதியுடனும் கேட்டு, சில விஷயங்களில் சீர்திருத்தகள் கொண்டு வந்து காமன்ஸ் சபையில் நிறைவேற்றிய தற்கு, அவருக்கும் பார்லிமெண்டரி உதவி மந்திரி பட்லர் அவர்களுக்கும், இந்தியா ஆபீஸ் சர் பிண்லேட்டர் ஸ்டுவர்ட் முதலியோருக்கும், சர். மால்கம் ஹெய்லி அவர்களுக்கும் நாம் நன்றி பாராட்ட வேண்டுவது அவசியம். நமக்கு ஒத்தாசையாக இருந்த பார்லிமெண்டு மெம்பர்களான வின்டர்டன் பிரபு அவர்கள் மிஸ்டர் காக்பாட்ரிக் முதலியோர், நியாயம் செய்யவேண்டுமென்று எண்ணிய எண்ணம் நமக்கு மிக ஒத்தாசையாக விருந்தது.

3. இனி எல்லாக் காரியங்களிலும் நாம் நலம்பெற ஒத்தாசையாக விருந்தது. கனம் டாக்டர் ராஜா சர். அண்ணாமலை செட்டியாரவர்களாவர். அவர்கள் பல வாரங்கள் சீமையில்செலவழித்து நம்சமூகத்தார் நலன்நாடித் தொண்டாற்றியது யாவரும் பாராட்டத்தக்கது. அவர்களின் செல்வாக்கு, எடுத்தகாரியத்திற்கு மிகவும்பயன்தந்தது. அவர்கள்தலைமையின்கீழ்யானும் ஒரு மெம்பராகச்சென்றது எனது பாக்கியம் எனக் கருதுகிறேன். அவர்கள் காரியமே கண்ணுகி மெய்வருத்தம் பாராது தளர்ச்சியின்றித் தொண்டாற்றினார்கள். அவர்கள் செய்த உதவி நம் சமூகத்தார் என்றும் மறக்கற்பாலதன்று. மற்ற மெம்பர்களும் ஒத்துப்பணி ஆற்றியதற்கு பாரிஸ்டர், M. M. ராவி அவர்களுக்கும், S. N. ஹாஜி அவர்களுக்கும், C. A. சூர்மா அவர்களுக்கும், டெலிகேஷன் காரியதரிசி தேசாய் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். எங்களுக்கு மிகவும் ஒத்தாசையாயிருந்த புதுக்கோட்டை வக்கீல் திரு, K. நாகராஜய்யரவர்களுக்கும் ரெங்கோன் நாட்டுக்கோட்டைச் செட்டியார் சங்க உதவிக் காரியதரிசி திரு. R. P. ராஜு அவர்களுக்கும் எனது நன்றி உரித்தாகுக.

இவ்விஷயத்தில் தூண்டுகோலாயிருந்த அகில செட்டியார் மகாநாட்டுக்காரியதரிசி ராவ்பஹதூர் உ. அ. பெரி. மு. அருணாசலச் செட்டியாரவர்களுக்கும், இப்பணிதந்து என்னைப் பெருமைப் படுத்திய கமிட்டியாருக்கும் என் நன்றியைச் செலுத்துகிறேன். என்னிடம் பேரன்பு காட்டிய நகரத்தாரவர்களுக்கு மீண்டும் நான் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

என்ற பின் மூன்று தீர்மானங்கள் கொண்டுவரப்பெற்றன.

## தீர்மானங்கள்:—

1. கனம் இந்தியா மந்திரி அவர்களும் மாட்சிமை பொருந்திய இராஜப்பிரதிநிதி அவர்களும் இந்தியா சட்டத்தில் பொதுவாக பர்மாவிலுள்ள இந்தியர்களுக்கும் சிறப்பாக செட்டியார் சமூகத்தாருக்கும், 'இந்தியா பில்' என்னும் சட்டத்தில் பாதுகாப்புகள் ஏற்படுத்த பர்மா இந்திய தூது கோஷ்டியாரின் வேண்டுதலை அமைதியுடன் கேட்டு, பாதுகாப்புகள் செய்து உதவி புரிந்ததை மிகவும் பாராட்டி நாட்டுக் கோட்டை நகரத்தார்கள் தங்களின் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார்கள். தூதுகோஷ்டியார் கேட்டுக்கொண்டபடி நம் சமூகத்தினர் உரிமைகளையும் இந்தியரின் உரிமைகளையும் நன்கு பாதுகாக்கும்படி திருத்தங்களைச் செய்துதரவேண்டுமென்று கனம் இந்தியா மந்திரி அவர்களை வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

2. நம்சமூகத்தினருக்கும், பர்மாவிலுள்ள பிற இந்தியர்களுக்கும் நேரக்கூடியனவா யிருந்த இடையூறுகளை நிவர்த்திக்கச் சமூகத்தினரின் பிரதிநிதிகளாகவும், பர்மா இந்தியர்களின் பிரதிநிதிகளாகவும் இங்கிலாந்துக்குச் சென்று இந்தியா சட்டத்தில் பாதுகாப்புகளுக்கு வேண்டிய திட்டங்களைச் செய்த டாக்டர் ராஜா ஸர். அண்ணாமலைச் செட்டியார் அவர்களுக்கும், அட்வகேட் கா. இராமநாதச் செட்டியார் அவர்களுக்கும் இதர பர்மா இந்திய தூதுகோஷ்டி அங்கத்தினர்களுக்கும் அவர்களுக்கு உறுதுணையாக உரிய தொண்டாற்றியவர்களுக்கும், நமது சமூகத்தார் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன் நம் விருப்பிற்கு இணங்கி நம்மவர் நலத்தைக்கருதிப் பலவேலைகளுக்கிடையில் கைமாறு கருதாது சொந்தச் செலவில் இங்கிலாந்துக்குச் சென்று பர்மா இந்திய தூதுகோஷ்டிக்குத் தலைமை வகித்துத் தமது செல்வாக்காலும் அரிய முயற்சியாலும் நம் சமூகத்தார் நன்மைக்கேற்ற வழிகளில் அரிய தொண்டாற்றிக் காரிய சித்தியுடன் மீட்சியுற்ற டாக்டர் ராஜா ஸர். அண்ணாமலை செட்டியார் அவர்களையும் அவர்களுடன் சமூக நலங்கருதி உறுதுணையாய் உடன் சென்று தொண்டாற்றி வந்த அட்வகேட் கா. இராமநாதச் செட்டியார் அவர்களையும் நம் சமூகத்தார் மனமுவந்து மிகவும் பாராட்டுகிறார்கள்.

3. இந்தியா சட்டத்தால் செட்டியார் சமூகத்திற்கு இன்னல் விளையாது தடுத்து நன்மையை நிலைநாட்டும் பொருட்டு தொண்டாற்றுறார் நகரத்தார்களால் நியமனம் செய்யப்பெற்ற கமிட்டியாரும், அதன் காரிய தரிசி ராவ்பகதூர் உ. அ. பெரி. மு. அருணாசலச் செட்டியார் அவர்களும், ரெங்கோன் நாட்டுக்கோட்டைச் செட்டியார்களின் சங்கத்தாரும், எடுத்துக் கொண்ட முயற்சிகள் இனிது நிறைவேறினமையால், அரிய பெரிய முயற்சிகளை மேற் கொண்ட கமிட்டியார்களையும், கமிட்டியின் காரிய தரிசியையும் சங்கத்தாரையும், நகரத்தார் மனதாரப் பாராட்டுகிறார்கள். மேலும், இந்த கமிட்டி தொடர்ந்து காரியங்களை நடத்தி வரவேண்டுமென்றும் தீர்மானிக்கிறார்கள்.

தீர்மானங்கள் கொண்டுவந்த ஆமோதித்த ஆதரித்த திருவாளர்கள்:—

முதலாவது தீர்மானம் புதுக்கோட்டை வக்கீல் V. சண்முகம் செட்டியார் பிரேரேபிக்க, காரைக்குடி ராவ்பஹதூர் சு. அ. சு. இராமநாதச் செட்டியார் ஆமோதிக்க, நாட்டரசன்கோட்டை அரு. சேவு. சேவகன் செட்டியார் ஆதரிக்க நிறைவேறியது.

இரண்டாவது தீர்மானம், மகிபாலப்பதி பண்டிதமணி, மு. கதிரேசச் செட்டியார் பிரேரேபிக்க, பள்ளத்தூர் சொ. மு. அ. மெ. இராமசாமி செட்டியார் ஆமோதிக்க, பலவான்குடி சு. அரு. அருணாசலச் செட்டியார் சிவநேசன் இராமசாமி செட்டியார் சண்முகநாதபுரம் ராம. நாகப்ப செட்டியார் ஆகியவர்கள் ஆதரிக்க நிறைவேறியது.

மூன்றாவது தீர்மானம் பள்ளத்தூர் அ. மு. ப. முருகப்ப செட்டியார் பிரேரேபிக்க, கொத்தமங்கலம் சிராம. மு. இலக்குமணச்செட்டியார் ஆமோதிக்க, இராயவரம் ப. வ. பழ. இராமசாமி செட்டியார் குமரன் ஆசிரியர் சொ. முருகப்ப செட்டியார் நெற்குப்பை லெ. ப. கரு. இராமநாதச் செட்டியார் ஆகியவர்கள் ஆதரிக்க நிறைவேறியது.

## தலைவரவர்களின் முடிப்புரை:—

அன்பிற் சிறந்த பெரியோர்களே!

நமது தனவணிக சமூக நன்மைக்காகத் தொண்டாற்றிய நிர்வாக சபையாரையும் பர்மா நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் சங்கத்தினரையும் தூதுகோஷ்டியினரையும் அதன் தலைவர் எனது பாலிய நண்பர் டாக்டர் ராஜா சர். அண்ணாமலைச்செட்டியாரவர்கள் நமது சமூகத்தாருக்கு வந்த பெரியதோரிடையூற்றை நீக்குதற் பொருட்டுத் தமது குடும்பத்தாரோடும் சிரமத்தைபாராது லண்டனுக்குச்சென்று மிக இலகுவில் காரியத்தைக் கைம்மாறு கருதாது முடித்துஉதவியதற்காக அவர்களேயும், அவர்கள் கருத்தின் வழி காரியத்தை நிர்வகித்த அட்வகேட் கா. இராமநாதச் செட்டியாரவர்களேயும், நமது வேண்டுகோளேப் பொறுமையுடன் ஏற்றுப் பாதுகாப்புகள் அளித்த துரைத்தனத்தாரையும் நமது சமூக நண்பர்கள் பலரும் பாராட்டித் தீர்மானங்களேப் பிரேரேபித்துள்ள தீர்மானங்கள் யாவும் நிர்வாக சபை நீடித்திருக்க வேண்டிய அவசியமும் நகரத்தார்களால் ஒருமித்த மனத்துடன் அங்கீகாரம் பெற்றன.

நகரத்தார்கள் ஒருமித்துமுயன்றதே இக்காரியம் இனிது நிறைவேறச் சாதகமாயிற்று.

என்பால்வைத்த அன்பு காரணமாக நகரத்தார்கள் என்னைத் தலைமை வகித்துக் கூட்டத்தை நடாத்தும்படி செய்ததைப் பின்னும் மனமாரப் பாராட்டி எனது நன்றியறிதலுடன் வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

பின்னர் கமிட்டிக் காரியதரிசி ராவ்பகதூர் உ. அ. பெரி. மு. அருணாசலச் செட்டியாரவர்கள் பின்வருமாறு யாவருக்கும் வந்தனம் கூறினார்கள்:-

## காரியதரிசி வந்தனம்:—

*பெருமை பெற்று விளங்கும் தனவணிகப் பெரியோர்களே!*

*இந்தியா மசோதாவினால் கூட்டுக் கமிட்டி அறிக்கையினால் இந்திய மக்கட்கும் நமது தனவணிக சமூகத்திற்கும் இன்னல்கள் நேராமல் பாதுகாக்கும் பொருட்டு நகரத்தார் அவர்கள் கோவிலூர் மடாலயத்தில் கூடி நியமனம் செய்தநிர்வாக சபைக்கு என்னைக் காரியதரிசியாக நியமித்தமைக்கு நான் மிகவும் நன்றிபாராட்டுகிறேன். என்னைத் தகுதியுடையவனாகக் கருதிய நகரத்தாரவர்களின் மதிப்பையும் நிர்வாகசபை அங்கத்தினர்களின் பேருதவியையும் துணைக்கொண்டு என் கடமையை இயன்ற அளவு ஆற்றியுள்ளேன். ரெங்கோனிலுள்ள செட்டியார்கள் சங்கத்தினரும் அகில தனவைசிய நிர்வாகசபை அங்கத்தினரும் பெருமுயற்சியுடன் மிகப்பொறுப்பும் பெருமதிப்பும் வாய்ந்த ஒரு தூதுகோஷ்டியைத் தேர்ந்ததும் அத்தூதுகோஷ்டியினரும் தூதுகோஷ்டியின் தலைவராக நமது நிர்வாக சபைத் தலைவரும் சமூகத் தலைவருமாகிய டாக்டர் ராஜா சர், அண்ணாமலைச் செட்டியாரவர்களும், சபை அங்கத்தினருளொருவரும் நமது சமூகத்தவருள் முதலாவது உயர்தர நீதிமன்ற வழக்கறிஞராகிச் சிறப்புற்றிருக்கும் அட்வகேட் கா. ராமநாதச் செட்டியாரும் இங்கிலாந்துக்குச் சென்று கனம் இந்தியா மந்திரி முதலானவர்களைப் பேட்டி கண்டும் விண்ணப்பங்கள் சமர்ப்பித்தும் காரியசித்தியுடன் திரும்பி வந்ததும் போற்றற்குரியன. ஆகவின், நமது நிர்வாக சபை பெருமை பெறுவதாயிற்று.*

*நிர்வாகசபை அங்கத்தினர்களுக்கும் ரெங்கோன் செட்டியார்கள்சங்கத்தினருக்கும் தூதுகோஷ்டியினருக்கும் தூதுகோஷ்டியின் தலைவர் அவர்களுக்கும் அவர்கள் கருத்தின்படி காரியத்தை நிர்வகித்த அட்வகேட் கா. இராமநாதச்செட்டியார் அவர்களுக்கும் நமது வேண்டுதலையுவந்து பாதுகாப்புகளளித்த துரைத்தனத்தார்க்கும் நகரத்தார் அவர்கள்நன்றிபாராட்டியவாறே நானும் மனப்பூர்வகமாக நன்றிபாராட்டுகிறேன். மேலும்கோவிலூர் மடாலயத்தின் ஆதிகர்த்தராகிய உயர்திரு, முத்துராமலிங்க ஞானதேசிகர் எனும் ஆண்டவர் திருச்சந்நிதியில்நகரத்தார்அவர்கள் கூடிப்பேசிக்காரியசித்திபெற அனுக்கிரகித்த உயர்திரு மகாதேவ ஞானதேசிக சுவாமி அவர்கட்கும் மிகப் பணிவுடன் மனமார்ந்த வந்தனம்செய்கிறேன். அகில இந்திய தனவணிக நகரத்தார் அவர்கட்கும் பர்மா நாட்டுக்கோட்டைச் சங்கத்தார்களுக்கும் இன்று இம்மாபெருங் கூட்டத்தில் தலைமை வகித்த தேவகோட்டை ஜமீந்தார் அள. அரு. ராம. வெள்ளையப்ப செட்டியாரவர்கட்கும் தீர்மானங்களை பிரேரேபித்த ஆமோதித்த அங்கீகரித்த பாராட்டிய அன்பர்கள் அனைவர்க்கும் மனமார்ந்த வந்தனம் செய்கின்றேன். எல்லா வகையானும் நாம் மேற்கொள்ளும் காரியங்களை இனிது நிறைவேற்றும் திரு நெல்லையம்பாள் சமேத கொற்றவாளீசர் திருவருளை யேத்திப் போற்றுவோமாக.*

*பின்னர், மாணவர்கள் வாழ்த்துக் கூறினார்கள். வந்திருந்தோர் அனைவருக்கும் அறுசுவை உணவு அளிக்கப்பெற்றது.*

---